# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 6 | இதழ் 29 | ஜூன் 10 1968 | பக்கங்கள் 12 | விலை சதம் 1


“உத்தேச மாவட்ட சபை மசோதாவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் நடைபெறும் தற்போதைய கிளர்ச்சி உண்மையில் சிங்கள மக்கள், தமிழ் மக்கள் ஆகிய இரு சாராரையும் ஏமாற்றுவதற்கும், அவர்கள் கவனத்தை உடனடியாக தீர்வு காண வேண்டிய பொருளாதார பிரச்சினைகளிலிருந்து திசை திருப்புவதற்கும் எடுக்கப்படும் முயற்சியே யல்லாமல் வேறொன்றுமில்லை.” என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது. அதன் முழு வாசகம் வருமாறு:

### மாவட்ட சபை பற்றி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

# தமிழரையும் சிங்களவரையும் ஏமாற்றும் கபட நாடகம்

தற்போதைய அரசாங்கத்தை அமைக்க யு. என். பி.க்கு உதவி செய்யத் தமிழரசுக் கட்சியைத் தூண்டும் நோக்கத்துடன் யு. என். பி. தமிழரசுக் கட்சிக்குக் கொடுத்த இரகசிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கே இம் மசோதாவைக் கொண்டுவர யு. என். பி. நிர்ப்பந்திக்கப்பட்டதேயல்லாமல், சிறுபான்மை இன மக்களின் உண்மையான குறைபாடுகளைத் தீர்க்கவேண்டும் என்று அது நம்புவதால் அல்ல.

தமிழரசுக் கட்சி அடுத்த பொதுத் தேர்தலில் தனது கவனத்தைப் பதித்துள்ளமதால், தமிழ் மக்களுக்குதான் ஏதோ ஒன்றையாவது சாதித்துவிட்டதாகக் காட்டி அவர்களை அக் கட்சி ஏமாற்ற விரும்புகிறது. அதனால்தான் ஒருவிதமான மாவட்டசபை மசோதாவை பாராளுமன்றத்தில் எப்படியாவது நிறைவேற்றிவிடவேண்டுமென்பதற்காகத் தனது சக்தி முழுவதையும் பிரயோகிக்கிறது தமிழரசுக் கட்சி.

உண்மையில் பார்க்கப் போனால், உத்தேச மாவட்ட சபை மசோதா தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான யு. என். பி. யினதும் தமிரசுக் கட்சியினதும் கூட்டு முயற்சியாகும். இம் மசோதா சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளில் எதனையுமே அளிக்கவில்லை. காலஞ்சென்ற திரு பண்டாரநாயக்கா மாவட்ட சபையையோ, அல்லது பிரதேச சபைகளையோ அமைப்பதற்கு முன் வந்த பொழுது அவர் கருதிய பண்முகப்படுத்தப்பட்ட உள்ளூராட்சியிலும் பார்க்க, இது மிகக் குறைவானதாகவே உள்ளது. இன்று முன்வைக்கப்படும் மாவட்ட சபை மசோதாவின்படி மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் எவ்வளவு இருக்கிறதென்றால், இறுதியில் கிராம சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்கள்கூட இம் மாவட்டசபைகளுக்கு இல்லாமல் செய்துவிடும்.

## பாராளுமன்ற சந்தர்ப்ப வாதத்திற்காக மக்களை திசை திருப்பும் பாதக முயற்சி

நிலைமை இப்படி இருக்க, கூட்டணிக் கட்சிகளும், விரக்தியடைந்த ஹேமா பஸநாயக்காவும் இம் மசேதாவைப் பற்றி ஏன் இவ்வளவு கூச்சலிடுகிறார்கள் என்று புரியவில்லை. நாடு எப்படி இரண்டாகப் பிளவுபட்டு விடுமென்பது விளங்கவில்லை. பண்டாரநாயக்காவின் கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கூறித் திரிந்தவர்கள், திரு. பண்டாரநாயக்கா தனது கொள்கையை முன்வைத்தபோது அவரின் அருகில்கூட இருந்திருக்கவில்லைபோல் தெரிகிறது. யு. என். பி. யின் தலைமையிலான பிற்போக்குவாதிகளின் எதிர்ப்பினால் மாவட்ட சபைகளை நிறுவுவதற்கான தனது முயற்சிகளை அவர் கைவிட்டதற்கும், சரியான கொள்கை எது என அவர் கருதியதற்கும் ஒட்டுமில்லை; உறவுமில்லை.

இப்பிரச்சினையையொட்டி கூட்டணிக் கட்சிகள் வகுப்புவாதப் பிரச்சாரம் நடத்த முயற்சிப்பதையும், பொது எதிரியான யு. என். பி. க்கும் வெளிநாட்டு ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான நேச சக்திகளாக இருக்கவேண்டிய சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் பிளவுபடுத்துகின்றமுயற்சிகளையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். சிங்கள மக்களை நசுக்குவதற்காக இந்த மாவட்ட சபைகள் மூலம் தமிழ் இராஜ்யம் ஒன்று தோன்றிவிடுமென கனவிலும் கூட நினைப்பவர்கள், உண்மையாக எமது நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற—தேயிலை, ரப்பர் தோட்டங்கள், வங்கிகள், வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகியவற்றைச் சொந்தமாக்கிக் கொண்டுள்ள எமது நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பைத் தம் வசப்படுத்தியுள்ள - சிங்கள வர்களையும் தமிழர்களையும் நசுக்குகின்ற - பிரித்தானிய ஏகாதிபத்தியம் இருப்பதன் உண்மையை உணரத்தவறிவிட்டனர்.

நாட்டின் இன்றையப் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம், இந் நாட்டின் பொருளாதாரம் ஏகாதிபத்தியப் பிடியில் இருப்பதுதான். எமது வாழ்க்கைச் செலவு உயர்ந்து செல்வதற்கும், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பதற்கும் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கும் இதுவே காரணம். யு. என். பிக்கு எதிராயுள்ள மக்களின் வெறுப்பை முற்போக்கான பாதையில் செலுத்தி வழி நடத்துவதற்குப் பதிலாக—இன, மொழி, சாதி வேற்றுமைகளைப் பாராது ஐக்கியப் படுத்தக் கூடிய சகல ஏகாதிபத்திய விரோத யு. என். பி. விரோத சக்திகளையும் ஐக்கியப் படுத்துவதற்குப் பதிலாக—கூட்டணிக் கட்சிகள் பொது மக்களின் வெறுப்பை வகுப்புவாதப் பாதையில் திசை திருப்ப முயற்சிக்கின்றன. அதன் மூலம் சகல பிற்போக்குவாதிகளையும் மனம் குளிரச் செய்துள்ளன.

இவர்கள் இப்போது ஆடுகின்ற ஆட்டம், பண்டாரநாயக்கா அரசாங்கங்கள் இருந்தபோது யு. என். பி. ஆடிய ஆட்டமேயாகும். கதாபாத்திரங்கள்தான் மாற்றப்பட்டுள்ளன. 1957-ல் பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தையும், அதனைத் தொடர்ந்து மாவட்ட சபைகளையும் எதிர்த்தவர்கள் யு. என். பி. யும் டட்லி சேனநாயக்காவும், ஜே. ஆர். ஜெயவர்த்தனவுமேயாகும். கண்டனத்திற் குரிய கண்டி யாத்திரையைக் கூட நடத்தும் அளவுக்குச் இவர்கள் சென்றனர். இம்புல் கொடசந்தியில் கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தாம் இந்த யாத்திரையைத் தடுத்து நிறுத்தினர். இன்றோ மாவட்ட சபைகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்பவர்கள் சிறிமாவோவும், பண்டாரநாயக்காவும் அவரது சுதந்திரக் கட்சியும், முன்னாள் இடதுசாரி கட்சிகளுமேயாகும்.

1960 மார்ச், ஜூலை தேர்தல்களின் போது, தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் வழங்கப்பட்டால் நாடு இரண்டாகப் பிளவுபடும் என சுட்டிக் காட்டும் இலங்கைப் படத்தை யு. என் பி. யினர் கொண்டு திரிந்தனர். இன்று அதே படத்தை கூட்டணிக் கட்சியினர் போதியளவு பாவிக்கின்றனர்.

1965 மார்ச் மாதம் தமிழரசுக் கட்சி தம்முடன் சேர்ந்து அரசாங்கம் அமைக்க முன் வந்தால் இதே கோரிக்கைகளைக் கொடுக்கத் தயாராயிருந்தனர் என்பதைக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் நேர்மையுடன் மறுக்க முடியுமா? தமது சிம்மாசனப் பிரசங்கங்களில் மாவட்ட சபைகள் நிறுவுவதாக வாக்களித்ததை சிறிமாவோ மறுப்பாரா?

சுயபுத்தியுடைய — எந்தவொரு பிரச்சினையையும் தெளிவாகப் பார்க்கக் கூடிய எவரும், இவையெல்லாம் படுமோசமான பாராளுமன்ற அரசியல் சந்தர்ப்பவாதம் என்பதை உணர்ந்து கொள்வர். இந்நாட்டின் அரசியல் கட்சிகள் யாவும், ஏதாவதொரு கால கட்டத்தில் மாவட்ட சபைகள் நிறுவுவதை ஆதரித்துள்ளன என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அவை தமது பாராளுமன்ற சந்தர்ப்ப வாதத்திற் கேற்ப அரசியல் குத்துக் கரணங்கள் அடிக்கின்றன.

சிறுபான்மை இன மக்களின் சகல பிரச்சினைகளும்-மொழிப் பிரச்சினையாயினும் சரி, பிரதேச சுயாட்சி, மற்றும் எந்தப் பிரச்சினையாயினும் சரி—அடிப்படையில் பொருளாதாரப் பிரச்சினைகளே என்ற உண்மையை உணர வேண்டும் இவையாவும் சிங்கள மக்களுக்

—12-ம் பக்கம் பார்க்க

தலையங்கம்

# றொபட் கென்னடி

கொலையுண்டு சென்ற அமெரிக்க செனட்டரும் ஜனாதிபதி பதவியை நாடிச் சென்றவருமான திரு. றொபட் கென்னடியின் மரணத்தையிட்டு நாம் கண்ணீர் வடிக்கப் போவதில்லை. இதைவிட சிறந்த வேறு காரணங்களுக்காக அக் கண்ணீரை நாம் வைத்துக் கொள்வோம்.

ஆனால், அமெரிக்கத் தலைவர்கள் தொடர்ச்சியாகக் கொலை செய்யப்படுவதிலிருந்து நாம் முக்கிய பாடங்கள் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஐக்கிய அமெரிக்க ராஜ்யங்கள் பலாத்காரத்தின் மூலம் தோன்றிய நாடு. செல்வம் கொழிக்கும் அந்த நாட்டின் உண்மையான உரிமையாளர்களான சிகப்பு இந்தியர்களை முழுமையாக கொன்று குவித்து, அழித்தொழித்ததின் அடிப்படையில் தான் அந் நாடு தோன்றியது. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட பல பலாத்கார முயற்சியின் ஊடாகத்தான் கொடூரமான இந்த மேற்கு வல்லரசு நிறுவப் பட்டது. இதன் வரலாற்றை இன்றும் பல ஹொலிவுட் சினிமாப் படங்களில் காணலாம்.

இன்றும் கூட பலாத்காரத்தின் அடிப்படையில் தான் அது வாழ்கிறது துரதிர்ஷ்ட வசமாக கறுப்பு நீக்ரோ மக்களுக் கெதிராகவும், ஏனைய நிறத்தவர்களுக் கெதிராகவும்' அமெரிக்காவுக் குள்ளேயும், வெளியேயும் வேண்டு மென்றே இப் பலாத்காரம் பாவிக்கப் படுகிறது, ரொபட் கென்னடி கொலை செய்யப் பட்டது பற்றிக் கண்ணீர் விடுகின்றவர்களுக்கு நாம் ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறோம். அமெரிக்காவின் வெள்ளை வகுப்பு வெறியர்களினால் நாய்கள் போல் சுட்டு வீழ்த்தப்பட்ட நூற்றுக்கணக்கான நீக்ரோ இனத்தவர்கள் விடும் கண்ணீர் பெருக் கெடுத்து ஓடியது; ஓடுகின்றது.

தமது அன்புக் குரியவர்கள் அமெரிக்கா ஜெட் விமானங்களினால் குண்டு போட்டு அக்ழிகப்படுவதையும், நம்பாம் விஷக் குண்டினாலும் நச்சுத்திராவக புகைக்குண்டினாலும் சுட்டெரிக்கப் படுவதைக்கண்டு கண்ணீர் விடும் வியட்நாம் மக்களின் தொகை எண்ணிலடங்காது. இந்த விஷயத்தில் வியட்நாம் ஒரு விதி விலக்கல்ல. அமெரிக்காவின் பைத்தியக் காரத்தனமான பலாத்காரத்தினால் அதிகமாகப் பாதிக்கப் பட்டவர்கள் வியட்நாம் மக்கள் என்பதோடு, வேறு பலரும் வேறு விதங்களில் பாதிக்கப் பட்டுள்ளனர். பிலிப்பைன்ஸ், லாவோஸ், இந்தோனேஷியா, கொங்கோ, டொமினிக்கன் குடியரசு, கௌதமாலா —இத்தியாதி நாடுகளின் மக்களும் பாதிக்கப் பட்டவர்கள். பலாத்காரமும் கொலையும்தான் அமெரிக்க வாழ்க்கைமுறை தமது நாட்டுப் பிரஜைகள் துப்பாக்கிகளை வைத்திருக்கும் உரிமையை (அதாவது கொலை செய்யும் உரிமையை) வெற்றிகரமாக ஸ்தாபித்துள்ள ஒரே ஒரு நாடு அமெரிக்காதான். அமெரிக்காவில் ஒரு நாய் வைத்திருப்பதற்கு அனுமதிச் சீட்டுப் பெற வேண்டியுள்து. ஆனால் துப்பாக்கி வைத்திருப்பதற்கு அனுமதி பெற வேண்டியதில்லை! தபால் மூலம் கூட துப்பாக்கியைப் பெற்றுக் கொள்ளலாம். அமெரிக்காவில் தனிப்பட்டவர்களிடம் 10 கோடிக்கும் அதிகமான பலவகையான துப்பாக்கிகள் இருப்பதாக கணக்கிடப் பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஆளும் வர்க்கத்தினர் சிகப்பு இந்தியர்களுக் கெதிராகவும், நீக்ரோ மக்களுக் கெதிராகவும், அமெரிக்காவுக்கு வெளியே உள்ள காலனி மக்களுக் கெதிராகவும் பலாத்காரத்தைப் பாவித்துக் கொண்டு, அதே சமயம், தமக் கெதிராக எவரும் பலாத்காரத்தைப் பாவிக்க மாட்டார் என்று எண்ணிக் கொண்டிருக்க முடியாது. அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட—அவர்கள் இன்றும் நடத்தி வருகின்ற—பலாத்காரம் இடையிடையே அவர்களுக் கெதிராகவும் திருப்பப் படுகிறது. அதைக் கண்டு அவர்கள் கூச்சலிடுகின்றனர். பலாத்காரத்தினால் பாதிக்கப் பட்டவன் ஒரு நீக்ரோவாகவோ, அல்லது ஒரு சிகப்பு இந்தியனாகவோ, அல்லது வியட்நாமியனாகவோ இருந்தபோது அவர்கள் கூச்சல் போடவுமில்லை, துக்கம் கொண்டாடவுமில்லை.

இன்று கொலை செய்யப்பட்டவர், அமெரிக்க ஆளும்வர்க்கத்தின் மத்தியில் கொஞ்சம் நல்லவர் என்ற பேச்சு எமக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆட்சியை தொடர்ந்து நடத்துவது எப்படி என்பது பற்றி- அதாவது தொடர்ந்தும் திறமையாகச் சுரண்டுவது எப்படி என்பதுபற்றி- ஆளும் வர்க்கத்தின் பல்வேறு பிரிவுகளில் பல தரப்பட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால் அடிப்படையில் அவர்கள் மத்தியில் வேற்றுமையில்லை. ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தால் றொபட் கெனடியும், வியட்நாமுக் கெதிரான ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஜோன்சனைப் போலவே தொடர்ந்து நடத்தியிருப்பார். ஒருவேளை வேறுபட்ட உபாயங்களைக் கையாண்டிருப்பார். நல்லவர் என்று விளம்பரப்படுத்தப்படும் இவரது சகோதரன் ஜோன் எப் கென்னடிதான் வியட்நாம் யுத்தத்தைத் துரிதப்படுத்தியவர்; கியூபாவைக் கைப்பற்றும் முயற்சிக்கு அனுமதியளித்தவர்.

நாம் ஏமாற்றுக் காரர்கள் போன்று முதலைக் கண்ணீர் வடிக்கத் தேவையில்லை. முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் மக்கள் மீது பலாத்காரத்தைப் பிரயோகிக்கும் அடிப்படையை கொண்டவை. இடையிடையே ஆளும் வர்க்கத்தினர் சிலரும் பலாத்காரத்துக்கு ஆளாகின்றனர். சுரண்டலும்' வர்க்க அடக்குமுறையும் அழித் தொழிக்கப்படும் வரை- ஒரு வர்க்க பேதமற்ற சமுதாயம் தோன்றும் வரை- பலாத்காரம் ஒரு போதும் ஒழிந்து விடாது.

# காங்கேசன்துறை பொலிசுக்கு வல்லையில் என்ன வேலை?

காங்கேசந்துறை பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் பாலசூரிய தற்கொலை செய்துள்ளதாக தினசரிப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. வல்லை நெசவுத் தொழிற்சாலையில் நடைபெறுகின்ற வேலை நிறுத்தத்தின் போது தொழிலாளர்களுடனும், மக்களுடனும் அவருக்கு ஏற்பட்ட கைகலப்பில் தனது துப்பாக்கியைப் பறிகொடுத்ததினால் மனமுடைந்துதான் அவர் தற்கொலை செய்ததாகக் கூறப்படுகின்றது.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தின் ஆணைக்குட்பட்ட வல்லையில், காங்கேசந்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜண்டுக்கு என்ன வேலை என்பது பலர் கேட்கும் கேள்வி. வல்வெட்டித்துறைப் பொலிசாரால் நிலைமை சமாளிக்க முடியாமல் போயிற்று? மேலதிகமான பொலிஸ் படையினர் வேண்டுமென அவர்கள் விண்ணப்பித்தனரா? காங்கேசந்துறையில் இருந்து வந்த பொலிஸ்காரன், வல்லைக்கு வந்தது வல்வெட்டித்துறைப் பொலிசுக்குத் தெரிந்திருந்ததா?

வேலை நிறுத்தம் நடைபெறுகின்ற தொழிற்சாலை அதிபர்கள், வல்வெட்டித் துறைப் பொலிசுக்குத் தெரியாமல் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, வேலை நிறுத்தம் செய்த தொழிலாளரை விரட்டியடிக்க காங்கேசந்துறைப் பொலிஸ்காரர்களைக் கொண்டு வந்துள்ளனர் என்று குற்றம் சாட்டப்படுவதால் மேற்படி கேள்விகட்குப் பதில் கிடைத்தாக வேண்டும். இந்தப் போலிஸ்காரர்கள் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டனர் என்றும், இதனால் ஏற்பட்ட கைகலப்பில் பாலசூரிய தனது துப்பாக்கியை இழந்தார். அது பின்பு ஓர் கிணற்றில் கண்டெடுக்கப் பட்டது என்றும் கூறப்படுகிறது.

பொலிஸ் அதிபர் இது பற்றி விசாரணை நடத்த ஒழுங்கு செய்வாரா?

# தோட்டப் பகுதியில் செங்கொடிச் சங்க தொழிலாளரின் வேலை நிறுத்த போராட்டம்

ஹட்டன், வெள்ளை ஓயா தோட்ட கீழ் பிரிவைச் சேர்ந்த சுமார் 300 செங்கொடிச் சங்க அங்கத்தவர்களும் ஏனைய தொழிலாளிகளும் தங்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளு முகமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். தோட்ட நிர்வாகம் பேச்சு வார்த்தைக்கு இணங்கிப் பிரச்சினைகளைத் தீர்த்துத் தருவதாக ஒப்புக் கொண்டதால் இப்போராட்டம் கைவிடப்பட்டது.

ஆண் தொழிலாளர்களின் வேலை நாட்களைக் குறைத்ததை எதிர்த்து தலவாக்கொல்ல, பார்ல் மெஸ்டன் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள். நிர்வாகம் சரியான முறையில் வேலை தருவதாக ஒப்புக் கொண்டதும் செங்கொடிச் சங்க அங்கத்தவர்களாகிய இந்த 200 தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பினார்கள்.

புல் வெட்டுக் கொந்தாரத்துத் தொழிலாளிகளின் வேலை மறுக்கப்பட்டதால், செங்கொடிச் சங்கத்தினதும், இ. தொ. கா. சினதும் அங்கத்தவர்களாகிய லக்ஷபான தோட்ட சென். அண்ட்ரூஸ் பிரிவு தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். நிர்வாகம் திரும்பவும் கொந்தராத்துக் காரர்களுக்கு வேலை கொடுப்பதாக ஒப்புக் கொண்டதும் இவ் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

சாமிமலை அரிசி தோட்டத்தைச் சேர்ந்த செங்கொடிச் சங்கத் தோழர்கள், நிர்வாகம் புல் வெட்டுக்கான வேலைப் பகுதியைக் கூட்டியதை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

தலவாக்கல்ல சி. டப்ளியூ. எம். தோட்டத்திலுள்ள செங்கொடிச் சங்க அங்கத்தவர்களான முழு தொழிலாளர்களும் தமது பொதுப் பிரச்சினைகளை வென்றெடுப்பதற்காகப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

வெளிநாட்டுக் கம்பனிகளுக்குச் சொந்தமான இத்தோட்டங்களில் நடக்கும் போராட்டங்களைத் தீர்த்து வைக்க தொழிற் பகுதி நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிகின்றது.

# தமிழ் அரசுக் கட்சி அச்சகம் தொழிலாளர் மீது பழி வாங்கியது

சுதந்திரன் பத்திரிகை காரியாலயத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர்கள்.

தமிழ் அரசு கட்சி நிர்வாகத்தினர் தமது தொழிலாளர்கள் தொழிற் சங்கத்தில் சேர்ந்தவர்கள் என தெரிந்தவுடன், பல தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ய முன்வந்திருக்கின்றனர்.

ராசையா, கனகநாயகம், என இரு தொழிலாளர்களை சுதந்திரன் அச்சக உரிமையாளர்கள் தவறான முறையில் வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள்.

இலங்கை அச்சு தொழிலாளர் சங்கத்தை சுதந்திரன் அச்சகத்தில் அமைப்பதற்கு முன்வந்த தோழர் சில்வாவையும் வில்லியம் சிங்கோ தோழரையும் தவறான அடிப்படையில் வேலை நீக்கம் செய்திருக்கின்றனர்.

இலங்கை அச்சு தொழிலாளர் சங்கம் இது சம்பந்தமாக தொழில் கோட் முன்பாக வழக்கு தொடர்ந்திருக்கிறது.

## அரசாங்க லிகிதர் சேவை சங்கத்தில்

# திரிபுவாதிகளின் நாசவேலை

இம்மாதம் 2-ந் தேதி நடைபெற்ற அரசாங்க சேவை சங்கத்தின் 48 வது மாநாட்டையொட்டி எழுதப்பட்ட இக்கட்டுரை தவிர்க்க முடியாத காரணத்தால் சென்ற வாரம் இடம் பெறவில்லை. அது இவ்வாரம் பிரசுரிக்கப்படுகிறது: —ஆசிரியர்

அரசாங்க பொது லிகிதர் சேவையிலுள்ள 22,000 ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 12,000 அங்கத்தவர்களைக் கொண்ட அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் 48 வது மாநாடு ஜூன் மாதம் 2 ந் தேதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இம் மாநாட்டில் ஏறக்குறைய ஆயிரத்திற்கும் அதிகமான பிரதிநிதிகள் பங்குபற்றுகின்றனர். இம்மாநாட்டில் சங்கத்தின் பொதுச் செயலாளர் பொது லிகிதர் சேவை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 120 ரூபாவாக உயர்த்தப்படல் வேண்டும்; (அதேபோன்று உயர்ந்த தரத்திலுள்ளவர்களின் அடிப்படைச் சம்பளமும் உயர்த்தப்படல்) 1966 ஜனவரி 8-ந் தேதி நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் பங்குபற்றியவர்கள்மேல் விதிக்கப்பட்ட சகல தண்டனைகளும் நீக்கப்படல் வேண்டும் என்ற சங்கத்தின் இரு பிரதான தீர்மானங்களையும் பிரேரிப்பார்.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தில் பலதரப்பட்ட அரசியல் கருத்துக் கொண்டோர் அங்கத்துவம் வகித்தபோதிலும் இவ்விரு பிரதான கோரிக்கைகளையும சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் எதுவித அரசியல் வேறுபாடுமின்றி ஆதரிக்கின்றனர். இந்த ஒற்றுமை இடதுசாரி மனப்பான்மையுடைய பொது லிகிதர் சேவை அங்கத்தவர் பெரும்பான்மையினர் மத்தியில் வெகு தெளிவாகத் தென்படுகிறது.

ஜனவரி 8-ந் தேதி வேலை நிறுத்தம் வகுப்புவாத சாரணங்களுக்காக நடைபெற்றதென அவ் வேலை நிறுத்தத்தைக் கண்டிப்பவர்கள்கூட, அவ் வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய, பிழையான வழியில் கொண்டு செல்லப்பட்ட அங்கத்தவர்கள்மேல் விதிக்கப்பட்ட எல்லாத் தண்டனைகளும் நீக்கப்படல் வேண்டும் என்பதை ஆதரிக்கின்றனர்.

கே. வைகுந்தவாசன்

### கழுத்தறுப்பு

இவ்விரு கோரிக்கைகளுக்கும் பின்னால் இத்தகைய ஒற்றுமை நிலவுகின்ற இக் கட்டத்தில் சங்கத் தலைமைப் பீடத்தில், முக்கிய பதவிகளைக் கைப்பற்றுவதில் கழுத்தறுப்புப் போட்டி நிசழ்வது மிகவும் வேதனைக்குரியதாகும்.

இந்நாட்டிலுள்ள அரசாங்க ஊழியர்களுக்கான தொழிற் சங்கங்களில் மிக முக்கியமானதென கருதப்படும் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் நிர்வாகத்திற்கென உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் போது அச்சங்கத்தின் இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு வேண்டிய நேர்மையான கடும் உழைப்பு, தொழிற்சங்க இயக்கத்திற்கே தம்மை அர்ப்பணித்தல் ஆகியவையே பிரதானமாகக் சவனிக்கப்பட வேண்டியவையாகும்.

அ. லி. சே. சங்கத்தின் தலைவர்களுக்கான தேர்தல் அரசியல் கட்சிகளின் அடிப்படையிலேயே நடைபெறுவது சகலரும் அறிந்த உண்மையாகும். 1947-ல் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்திற்குப் பின்னர், அ. லி. சே. சங்கத்தினதும் மற்றும் நூற்றுக்கணக்கான அரசாங்க ஊழியர்களின் தொழிற்சங்கங்களினதும் தலைவர்கள் முற்போக்கு எண்ணங்கொண்டவர்களாகவே இருந்துள்ளனர்.

இலங்கையில் முதல்முதலாக நடைபெற்ற அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு மற்றும் அநேகருடன் தலைமைதாங்கிய அ. லி. சே. சங்கத்தின் முன்னாள் தலைவராகிய திரு. ரி. பி. இலங்கரத்தின இதனை உறுதிப்படுத்துவார்.

### விளக்காத புதிர்

கெனமன்—திரிபுவாதக் கும்பல் முக்கூட்டணியில் இருப்பதாகக் கூறிக்கொண்டபோதிலும் (அதன் மூலம் சமசமாஜ கட்சியுடன் ஒன்றிணைக்கப்பட்டிருக்கின்றபோது) சமசமாஜ கட்சியின் தலைமையிலுள்ள அ. லி. சே. சங்கத்தைக் கைப்பற்றுவதற்கு உறுதியான முயற்சி எடுக்கிறது.

திரிபுவாதிகள் முக்கூட்டணியிலிருப்பது உண்மையானால்—அதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை அவர்கள் ஏற்றிருப்பது உண்மையானால்—அம் முக்கூட்டணியில் உள்ள இன்னொரு பங்காளியை ஏன் அவர்கள் வெளிப்படையாகவும் கடுமையாகவும் எதிர்க்கின்றார்கள் என்பது ஒருவருக்கும் விளங்காத புதிராக இருக்கிறது.

விக்ரமசிங்கவும் கெனமனும் தமது ஏகாதிபத்திய சார்பான நோக்கங்களுக்கும் எண்ணங்களுக்குமாக அ. லி. சே. சங்கத்தைப் பாவித்து சமசமாஜிகளுக்கு எதிராக இப்போதிருந்தே போராடத் தொடங்கி விட்டார்களா? அப்படி இல்லையென்றால், அரசாங்க ஊழியர்களின் பிரதான தொழிற்சங்கத்தில் சமசமாஜிகளுடன் இரண்டில் ஒன்று பார்த்து விடுவதென இறங்கி இருக்கும் திரிபுவாதிகளின் தந்திரோபாயத்தினதும் கொள்கையினதும் அர்த்தமென்ன?

இந்நிலையில், அ. லி. சே. சங்கத்தினுள் இரு முக்கிய பகுதிகளுக்கிடையே நிலவும் பகைமையை எந்த அரசாங்கமும் தனக்குச் சாதகமாகப் பாவித்து, சங்கத்தின் நியாயமான- சாதாரணமான— கோரிக்கைகளைத் தட்டிக் கழிக்க முடியும்.

### பல பிரச்சினைகள் உள்ளன

மேலே குறிப்பிடப்பட்ட இவ்விரு பிரதான கோரிக்கைகளையும் தவிர அங்கத்தவர்கள் எதிர்நோக்கும பல பிரச்சினைகளும் உள்ளன. பொது லிகிதர்வகுப்பை நிறைவேற்று லிகிதர் வகுப்புடன் இணைப்பது, இலங்கை நிர்வாக சேவைக்கான ஆள் சேர்ப்புத் திட்டம் போன்றவை அப்பிரச்சினைகளில் சில.

திரிபுவாதிகள் தற்போதைய தலைமைப் பீடத்திற்குத் தமது முழு ஆதரவையும், ஒத்துழைபபையும் அளிக்காத பட்சத்தில் அ. லி. சே. சங்கத்தின் பிரதான கோரிக்கைகளை அச்சங்கம் வென்றெடுக்க முடியாதென்பது மிகத் தெளிவானதாகும்.

போராட்டத் தன்மையுள்ள தொழிற்சங்கத்திற்கு வேண்டிய முதன்மையானவை முதலில் கவனிக்கப்படவேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடிக்காமல், அண்மைக் ககலங்களில் அ.லி சே. சங்கம் மரண நன்கொடைத்திட்டம், இளைப்பாற்று நன்கொடைத்திட்டம் போன்ற இரண்டாந்தர விஷயங்களில் தனது சக்தியைச் செலவழித்து வருகின்றது.

ஒரு தொழிற்சங்கம் தனது அங்கத்தவர்களைத் தன் அணியில் வைத்திருப்பதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய சரியான வழி, தலைமைப்பீடத்தின் கவனத்தில் சாதாரண அங்கத்தவர்களின் நலன்களும்—அவர்களின் நலன்கள் மட்டுமே—உள்ளதென்பதைத் தெளிவாகக் காட்டுவதே.

அ. லி சே. சங்கத்திற்கு மாதம் ஒன்றுக்கு சந்தாப் பணம் மட்டுமே 12,000 ரூபாய் கிடைக்கிறது. பொதுச் செயலாளர் முழு நேர ஊழிய ராகும். தொழிற்சங்க வேலைகளைக் கவனிப்பதற்கென பொதுச் செயலாளர் அரசாங்கத்தினால் அரசாங்கக் கடமையிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளார். அவருக்கு உதவியாளராக சம்பளம் பெறுவோர் ஆறுபேர் இருக்கின்றனர். இவர்களைத் தவிர, தலைமைப் பீட உத்தியோகத்தினரதும், காலத்துக்குக் காலம் கடமையாற்றும் நூற்றுக்கணக்கான தொண்டர்களினதும் உதவி அவருக்குக் கிடைக்கிறது. இவ்வளவு பேர் சங்கத்தின் ஸ்தாபன வேலையைக் கவனிப்பதற்கு இருக்கும்போது தலைமைப் பீடம் மட்டும் ஐக்கியப்பட்டிருப்பதோடு, இச் சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினரதும் ஆதரவையும் விசுவாசத்தையும் பெற்றுக் கொள்ளுமேயானால் அ லி. சே. சங்கம் இலங்கை தொழிற்சங்க இயக்கத்தில் முக்கியமான சக்திவாய்ந்த பாத்திரத்தை வகிக்க முடியும்.

ஆனால் திரிபுவாதிகள் தமது சீர்குலைவு வேலைகளைக் கை விட்டு ஏனைய முற்போக்கு சக்திகளுடன் இந்த உடனடியான- தேவையான- கடமையில் ஒத்துழைப்பார்களா?

## கல்தா!

மாஸ்கோவிலும் லெனின் கிருட்டிலும் உள்ள 5 மோட்டார் தொழிற் சாலைகளின் அதிகாரிகள் 5 மாதங்களுக்கிடையில் 239 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளார்கள். அது யாத்திரமா? மாஸ்கோவிலுள்ள 15ம் இலக்க டிறக் (லொறி) பாராமரிப்புத் தொழிற் சாலையில் அதிக லாபம் பெரும் நோக்கத்துடன் ஒரே தடவையில் நிர்வாகத்தினால் 10வீதத் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள்.

சோவியத் திரிபுவாத லாப வேட்டை ''நீடூழி வாழ்க!''

## பொன்னம்பலத்தாரின்

# பொது மேடை

அக்காலத்தில் யு. என். பி. எதிர்க் கட்சியாக இருந்த போது, தானே தமிழர்களின் தனியொரு பேச்சாளன்- ஊது குழல் என சுவித் திரிந்தார் பொன்னர். பாராளுமன்றத்தில் கால் வைக்க முடியாத காலகட்டத்தில் பொன்னர், வட்டமேசை மாநாடே தமிழர்களுக்கு விமோசனம் என்றும் அத்தகைய மாநாட்டில் தனது பேச்சுத் திறமையால் யாவரையும் மயக்கி தமிழர்களின் உரிமையைப் பெற்றுத் தருவேன் என ''பொன் மொழிகள்'' உதிர்த்தார், பொன்னம்பலத்தார்!

பாராளுமன்றத்தில் மறுபடியும் நுழைந்து யு என். பிக்குப் பலத்தை தேடிக் கொடுத்த பொன்னர், தனது எசமானர்களைக் கலவரப் படுத்த விருப்பமின்றி, தனது பேச்சுக் கலையைப் பாராளுமன்றத்தில் மூட்டை கட்டி வைத்துவிட்டு, ஐக்கிய நாடுகள் சபையில் போய் அவிழ்த்து விட்டார். உலக அரங்கில் தமிழர்களுக்காகப் பேசுகின்றேன் என மார் தட்டிய பொன்னர், மறுபடியும் ஐ. நாவுக்குப் போக முடியவில்லை என்றவுடன், தனது பேச்சு மூட்டையை அவிழ்ப்பதற்குச் சகாக்களான தமிழரசுத் தம்பிரான்களைப் ''பொதுமேடை'' யொன்று அமைத்துத் தரும்படி கூவியழைக்கிறார்.

பேசுவது அறியாது பேந்தப் பேந்த விழிப்பவரும், கந்தைத் துணியாகிவிட்டவருமான செல்வ(லா)நாயகமும், ஒரு பொதுமேடையை இன்று விருப்புகின்றார். ராணி மாளிகைக்குள் நுழைய முயற்சித்து முடியாமல் விரக்தியடைந்த ஹேமா பச(ப்பு)நாயக்காவையும் இப் பொது மேடைக்கு வரும்படி இவர்கள் மறைமுகமாக அழைப்பதில்வியப்பில்லை. இம் மூவரும் சேர்ந்தால் ''பொது மேடை'' நாடகம் விறுவிறுப்பாக இருக்கும். தமிழர்களையும் சிங்களவர்களையும் ஒன்றுசேர இன்னொருகால் ஏமாற்றலாம் என தளர்பதியும் தாசர்களும் மனப்பால் குடிக்கின்றனர்.

ஆனால் இத்தகைய நாடகத்திற்கு அண்மையில் இடமில்லை. கொஞ்ச நாட்கள் பொறுத்தால் இவர்களுடன் சேர்ந்து நேன நாயக்காக்கள், ஜெயவர்தனக்கள், இராஜரத்தினக்கள், தொண்டமான்கள், பிலிப்பையாக்கள் போன்றோர் வெகு விறுவிறுப்பான தேர்தல் நாடகத்தில் விளாசித் தள்ளலாம் என்கிறார் கமராக் கார டட்லி.

ஆனால் இவர்கள் ஒன்று நினைக்கப் பொது மக்கள் வேறொன்றையல்லவா நினைக்கின்றார்கள். இக் கும்பிடு கூட்டத்தின் பிரேதங்களுக்கு நடத்தப்படும் ஈமச் சடங்கில் நடைபெறும் பிரசங்கத்தைக் கேட்கும் காலம் எப்போது வரும் என்று அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

## நம்மைச் சுற்றி

நவம்

# வாக்குக் கேட்டவரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை

இலங்கையின் தொழிற் சங்க ஐக்கியத்தைப் பிளவு படுத்தும் வேலைகளில் திரிபுவாதிகள் எப்போதுமே ஈடுபட்டு வந்திருக்கின்றனர். 1963-ம் ஆண்டு இலங்கையின் பலம் வாய்ந்த தொழிற் சங்கமாகிய இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தைப் பிளவுபடுத்த திரிபுவாதிகள் முயற்சி எடுத்த போது தொழிலாளர்களால் துரத்தியடிக்கப்பட்டமை வரலாற்றுப் புகழ் மிக்க நிகழ்ச்சி; தற்போது எழுது வினைஞர்கள் மத்தியிலுள்ள பலம் வாய்ந்த சங்கமாகிய அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் ஐக்கியத்தைக் குலைக்க முயன்ற திரிபுவாதிகள் படுதோல்வி கண்டுள்ளனர். ஜூன் இரண்டாந் தேதி நடைபெற்ற அரசாங்க லிகிதர் சேவைச் சங்க பிரதிநிதிகள் மாநாட்டில் திரிபுவாதிகள் முற்ருக முறியடிக்கப் பட்டனர்.

சங்கத்தின் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதற்காக கூட்டணிக் கட்சிகளில் ஒன்ருன சமசமாஜ கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தற்போதைய தலைமைப் பீடத்தைக் காரசாரமாகக் கண்டித்துத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டனர். பதிலுக்கு சமசமாஜிகளும் துண்டுப் பிரசுரத்தால் அடிகொடுத்தனர். ஒரு பெரிய ''துண்டுப் பிரசுர யுத்தமே'' நடந்தது.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்துடன் சேர்ந்து அக்டோபர் மாதம் 21-ந் தேதி வியட்நாம் உறுதிப்பாடு ஆர்ப்பாட்டம் நடத்தியமையே பிரதான குற்றச்சாட்டாக திரிபுவாதிகளின் துண்டுப் பிரசுரங்களில் முன் வைக்கப்பட்டது. இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்துடன் சேர்ந்து ஒத்துழைத்தது பிழை என திரிபுவாதிகள் பிரசாரம் செய்தார்கள். ஆனல் இ. தொ. ச. ச. வுக்கு எதிரான இந்த பிரசாரம் அங்கத்தவர்கள் மத்தியில் எடுபடவில்லை. எனவே மாநாடு 2-ந் தேதி தொடங்கியபோது திரிபுவாதிகள் இ. தொ. ச. ச, வுக்கு எதிரான தமது பல்லவியைத் திடீரென கைவிட்டுப் புதிய தந்திரத்தைக் கையாண்டார்கள். தலைமைப் பீடம் கிடைக்காவிட்டாலும், நிர்வாகக் குழுவிலாவது இடம் கிடைத்தால் போதும் என்ற நப்பாசை. அதுவும் பலிக்கவில்லை. போட்டியிட்ட சகல திரிபுவாதிகளும் மண் கவ்வினர்கள்; படுதோல்வியடைந்தார்கள் திரிபுவாதிகளை மக்கள் நன்ருகப் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு.

உத்தியோகத்தர் தெரிவுக்கு திரிபுவாதிகள் தனிப்படச் சென்று பிரதிநிதிகளைக் கண்டு தமக்கு வாக்களிக்குமாறு கோரியபோது அவர்களுக்கு அளிக்கப்பட்ட பதில்கள் மிகச் சுவையானவை. ''தற்போதைய (சமசமாஜ) தலைமைப் பீடம் எமது கூலி உயர்வுக் கோரிக்கைக்காக உறுதியுடன் புரட்சிகரமாகப் போராடத் தவறிவிட்டது. நாங்கள் ஒரு புரட்சிகரத் தலைமையைக் கட்டி எழுப்ப வேண்டும். ஆகவே, உம்முடைய வாக்கை எமக்குத்தாரும்'' என்று திரிபுவாதி ஒருவர் வாக்குக் கேட்ட போது பிரதிநிதியொருவர் பின்வருமாறு பதில் அளித்தாராம். ''நல்லது! ஒரு புரட்சிகரத் தலைமையைக் கட்டி எழுப்பத்தான் வேண்டும். ஆனல் புரட்சிகரத் தலைமையை உங்களால் அளிக்க முடியுமோ? ஏற்கனவே உங்கள் தலைமையில் உள்ள சில சங்கங்கள் இதற்கு மாருக அல்லவா இருக்கின்றன! உதாரணமாக, வில்லியம் சிங்கோவைத் தலைவராகக் கொண்ட பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கம் உங்கள் கட்டுப்பாட்டில்தானே இருக்கிறது. அச் சங்கத்தின் 'புரட்சிகரத்' தலைமையைப் பற்றி நாடு முழுவதும் அறியுமே! காலையில் வேலை நிறுத்தம் தொடங்கிவிட்டு மாலையில் வாபஸ் வாங்கியவர்கள் ஆயிற்றே! வேண்டுமானல் முதலில் அந்தச் சங்கத் தலைமையைத் திருத்திவிட்டு வாருங்கோ: அதோடு இன்னுமொன்று. பிரான்சிலுள்ள உங்களுடைய ஆட்களுக்கு அறிவியுங்கோ. மாணவர்களும் தொழிலாளர்களும் நடத்தும் போராட்டத்துக்கு 'புரட்சிகரத் தலைமை' அளிக்கச் சொல்லி!'' திரிபுவாதி குனிந்த தலை நிமிராமல் திரும்பிச் சென்றுவிட்டார்.

இன்னெரு திரிபுவாதி மார்க்சிஸ்ட் ஒருவரிடம் வகையாக மாட்டிக்கொண்டார். ''ஏனப்பா? நீங்கள் மட்டும்தான் புரட்சிக்காரரோ? நாங்களும் புரட்சிக்சார்கத்தான் நிற்கின்ரேம். நீங்கள் புரட்சியை ஆரம்பியுங்கோ, நாங்களும் வந்து சேர்கிரேம்'' என்று திரிபுவாதி நக்கலாகக் கூறினர். ''ஏன் புரட்சிகர மந்திரி சபையில் பதவி பெற ஆசையோ?'' என திருப்பிக் கேட்டார் மார்க்சிஸ்ட். திரிபுவாதி கப்சிப்!

திரிபுவாதிகள் தோற்கடிக்கப்பட்ட இந்த மாநாட்டில்தான் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் வரலாற்றிலேயே முதன் முதலாக ஓர் அரசியல் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. பிரான்சில் போராடும் புரட்சிகர மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஆதரவு தெரிவித்த இத் தீர்மானம் மார்க்சிஸ்டுகளால் கொண்டு வரப்பட்டது.

★

### சமசமாஜிகளும் புரட்சியும்

மூக் கூட்டணிக் கட்சிக்காரர்களான சிறீலங்கா சுதந்திர கட்சி, சமசமாஜிகள், கெனமன் திரிபுவாதிகள் ஆகியோரின் பொது வேலைத் திட்டம் முற்ருகப் புரட்சிகரப் பாதையைக் கை விட்டு, பங்கலோட்டான பாராளுமன்றப் பாதையை அங்கீகரித்த போது, சிறீலங்கா சுதந்திர கட்சியில் உள்ள முற்போக்காளர் மத்தியிலும் சமசமாஜ கட்சியின் சாதாரண அங்கத்தவர்கள் மத்தியிலும் பெரும் அதிருப்தி தோன்றியது. சாதாரண அங்கத்தவர்கள் சமசமாஜ கட்சியின் தலைமைக்கெதிராக கேள்வி யெழுப்பத் தொடங்கினர். அவர்களைச் சாந்தப் படுத்துவதற்காக சமசமாஜ கட்சியின் பத்திரிகை தமது நோக்கம் இப்போதும் புரட்சிதான் என்று எழுதியது. இது வெறும் ஏமாற்று என்று மார்க்சிஸ்டுகள் அப்போதேகூறினர்சகள். சமசமாஜ கட்சித் தலைவர்களின் சமீபத்திய சில செயல்கள் அவர்களது ஏமாற்றை அம்பலப் படுத்துகின்றன. சென்ற வாரம் ரேயல் கல்லூரியில் நடைபெற்ற காந்தி நினைவு தினக் கூட்டத்தில் சமசமாஜ கட்சித் தலைவர்களில் ஒருவரான பெர்ஞட் சொய்ஸா கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். தமது சொற்பொழிவில் அவர், காந்தியாரின் அகிம்சா முறையை விண்ணளாவப் புகழ்ந்தார். இலங்கையரும் அகிம்சா வழியைப் பின்பற்ற வேண்டும் என்ற தோரணையில் பெர்ஞட் சொய்ஸா பேசினர். அகிம்சைப் புரட்சி மூலம் சோஷலிஸத்தை இலங்கையில் கொண்டு வரலாம் என்பது அவர் கருத்தோ?

இதே சமயத்தில் இம்மாத இறுதியில் மொரிசியஸ் தீவில் நடைபெறவிருக்கும் பாராளுமன்ற மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக என். எம். பெரேரா கலந்து கொள்வார் என்றுசெய்தியும் வெளிவந்துள்ளது. பாராளுமன்ற விவகாரங்களில் கலாநிதிப் பட்டம் பெற்றவரல்லவோ என்.எம்.? பாராளுமன்ற ஆட்சியின் பெருமையைப் பற்றி விளாசித்தள்ளுவார் என நினைக்கின்ரேம். இப்படி, இது காலவரை புரட்சி பற்றி உதட்டளவில் பேசிக்கொண்டு வந்திருந்தாலும் பாராளுமன்றத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டவர்கள்—பாராளுமன்ற விதிகளுக்கு அமைந்து நடக்க ஒப்புக் கொண்டவர்கள்—ஜூன் 8-ந் தேதி மாவட்ட சபை பற்றிய வெள்ளையறிக்கை சமர்ப்பிக்கப்படும் சமயத்தில் மட்டும் பாராளுமன்றத்திற்கு வெளியே ஓடத் (வெளி நடப்பு) தீர்மானித்திருப்பது ஏன்? இப்படிக் கேட்டவர் தோழர் எஸ். டி. பண்டாரநாயக்கா.

★

### கல்வித்துறையில் ஏகாதிபத்திய ஊடுருவல்

அமெரிக்க, மேற்கு ஜெர்மானிய சதி ஸ்தாபனங்களான ஆசிய பவுண்டேசன், ஈபேட் பவுண்டேசன், மத்திய உளவு ஸ்தாபனம் (சி ஐ ஏ) ஆகிய நாசகார நிறுவனங்களின் ஊடுருவல் உலக நாடுகள் பலவற்றில் அம்பலமாக்கப்பட்டு இவை துரத்தப்பட்டதும் பலர் அறிந்த விஷயம். இலங்கையில் இந்த நிறுவனங்களோடு அமெரிக்க சமாதானப்படை, லயன்ஸ் இண்டர்நேஷனல் போன்ற நிறுவனங்கள் இயங்கி வருவது தெரிந்த விஷயம். இவற்ருேடு சமீபத்தில் 'ஹோப்' கப்பலும் வந்துள்ளது. அரசியல் பொருளாதாரத்துறைகளில் இவர்களுடைய ஊடுருவல் அம்பலப் படுத்தப்பட்ட போதும் கல்வித்துறையிலான ஊடுருவல் அம்பலப்படுத்தப்படவில்லை. இவர்களுடைய ஊடுருவல் இரண்டு வகையாகும். ஒன்று தாமே நேரடியாக நடவடிக்கையில் ஈடுபடுவது, மற்றது உபகாரச் சம்பளங்கள் போன்றவற்றை வழங்கிக் கைக்கூலிகளைக் கொண்டு ஊடுருவல் செய்வது. இந்த இரண்டு வகை ஊடுருவலும் இலங்கையில் நடைபெறுகிறது.

உதாரணமாக, இப்போது தொழில் நுட்பத் தொண்டர்கள் என்ற போர்வையில் மேற்கு நாட்டிலிருந்து பலர் எமது தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு வந்துள்ளனர். இவர்கள் தொண்டர்கள் என்று சொல்லப்பட்ட போதும், ஆளுக்கு மாதம் 175 ரூபா படியாக அரசாங்கத்தால் கொடுக்கப்படுகிறது. அதே சமயத்தில் மாணவ ஆசிரியராகக் கடமையாற்றும் பட்டதாரியான இலங்கையர் ஒருவருக்கு 100ரூபாய் மட்டுமேவழங்கப்படுகிறது. மேற்கு நாடுகளிலிருந்து வந்துள்ள 'தொழில் நுட்ப வல்லுநர்களை' விட திறமை வாய்ந்த விஞ்ஞானப் பட்டதாரிகள் எமது நாட்டி

12-ம் பக்கம் பார்க்க

# தமிழைப்பற்றி தட்டி கேட்ட தமிழரசார் -டட்லியின் தடிக்கடங்கி தகிடுதத்தம் செய்கிறார்கள்

## உலக வலம்

★

உஸ்மான்

# ஏகாதிபத்தியத்தின் வேலையை இந்திரா காந்தி செய்கிறார்

### ★ இந்தியப் பிரதமரின் கிழக்காசிய சுற்றுலா சீனாவுக்கு எதிர்ப்பு அரண் உருவாக்கவே

### ★ அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் சோவியத் திரிபுவாதிளும் கம்யூனிஸ விரோதிகளுக்கு விழாகொண்டாடுகிறார்கள்

சென்ற வாரம் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றிலும் தனி வெள்ளையர் நாடான அவுஸ்திரேலிய நியூசிலாந்திலும் ''சுற்றுலா'' செய்துவிட்டு இந்தியா திரும்பினார். வழக்கமாக முதலாளித்துவ அரசாங்கத் தலைவர்கள் விஜயம் மேற்கொள்வது போல சாதாரணமான ''நல்லெண்ண''த் தூதிலேயே நேருவின் மகளும் சென்றிருந்ததாக முதலாளித்துவப் பத்திரிகைகள் முழங்கின. அதற்கேற்ப அம்மையாரும் போன நாடுகளின் தலைவர்களுடன் சேர்ந்து கூட்டறிக்கைகள் விடுத்தார். வெளித் தோற்றத்திற்கு யாவும் சம்பிரதாய பூர்வமாகவே காணப்பட்டன. ஆயினும் ''நல்லெண்ணத்'' திரைல் மூடி மறைக்கப்பட்டுள்ள தீய எண்ணம் ஒன்றும் திரைமறைவில் இருந்து இயங்கியது என்பது கவனித்துப் பார்த்தோருக்குப் புலப்படாமற் போயிருக்காது. அதுதான் சீன எதிர்ப்பு அணி உருவாக்கமாகும்.

''மலேஷியா''விலிருந்து நியூசீலந்துவரை இன்று சிறியதும் பெரியதுமான நாடுகள் பலவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நேரடியான பிடிக்குள் வந்துள்ளன; அந்தப் பிராந்தியத்திலிருந்து ஆங்கிலேயர் மெல்ல மெல்ல அகலுகின்றனர். இந்நிலையில் உலக மக்களால் வெறுக்கப்படும் அமெரிக்க—யங்கி—ஏகாதிபத்தியம், அப்பிராந்தியத்தில் நேரடியாகக் குந்தியிராமல் சில சூத்திரப் பாவைகள் மூலம் விரும்பியதைச் சாதிக்க முனைகிறது. இந்தியா, இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா முதலிய சில ''பெரிய'' நாடுகளைக் கருவியாகக் கொண்டு இதர சிறிய நாடுகளை ஆட்டிப் படைப்பதே அமெரிக்கத் திட்டமாகும். இதன் சாதகங்களை உசாவவே இந்திரா காந்தி இருவாரச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். ''மலேஷியா'' பிரதமர் துங்கு அப்துல் றஹ்மானுடன் விடுத்த கூட்டறிக்கைகளில் தென் கிழக்காசியப் பிராந்தியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதால் அங்கு ஒரு சூன்ய நிலை தோன்றுவதாயும், அதனைச் சில ஆசிய நாடுகளே நிரப்பவேண்டுமென்றும் கூறப்படுகின்றது. அத்தோடு இப் பிராந்தியத்தில் இந்தியாவின பொறுப்பு முக்கியமானது என்றும் கூறியுள்ளார் இந்தியப் பிரதமர். பொறுப்பு என்ற சொல்லை ஏகாதிபத்திய அணியைச் சேர்ந்த நாடுகள் பயன்படுத்துவது எத்தகைய அர்த்தத்தில் என்பதை வரலாறு அறியும்; நாமும் நன்கறிவோம்.

பசிபிக் சமுத்திரத்தில் ''தனது பொறுப்பு'' உண்டு என்று கூறிக்கொண்டுதான் அமெரிக்கா தென்கொரியாவிலிருந்து தென் வியட்நாம் வரை ஆக்கிரமிப்பு நடத்துகிறது. தென் அமெரிக்காவில் தனது ''பொறுப்பு'' அதிகம் என்று கூறிக்கொண்டுதான் லத்தீன் அமெரிக்கத் தேசங்களைக் காலனிகளாக வைத்திருக்கிறது. இந்து சமுத்திரத்தில் இந்தியாவிற்கு நிறைய ''பொறுப்பு'' உண்டென்று கே. பி. எஸ். மேனன், கே. எம். பணிக்கர் முதலிய இந்திய ராஜதந்திரிகள் மட்டுமன்றி, ''சமாதானத் தந்தை'' நேருவே கூட விடாது கூறி வந்துள்ளார். ஆங்கிலோ—அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சாயலில் தம்மைக் கண்ணடியில் கண்டு கொள்ளும் இந்தியப் 'பெரு முதலாளித்துவத்தின் பொருளாதார விஸ்தரிப்புக் குரல்' இதுவுமாகும்.

அதை அனுசரித்தே நவீன காலனித்துவ முறையை உள்ளடக்கி இந்தியா போன்ற நாடுகளைத் தமது இளைய பங்காளிகளாக எச்சில் துண்டுகள் பொறுக்க விடுகிறது, அமெரிக்கா. கைம்மாருக, இந்நாடுகள் குருவை மிஞ்சிய சிஷ்யராக கம்யூனிஸ்டு விரோத வேலைகளில் காலங் கழிக்கின்றன.

இந்திரா காந்தி கூறிய கருத்துக்களையே அமெரிக்காவின் காலனியான பிலிப்பைன்ஸ் அதிபர் சியாட்டோக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். சட்டப்படி இந்தியா சியாட்டோ ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாவிடினும் நடைமுறையில் ஒன்று பாகிஸ்தானைவிட இந்தியா ஏகாதிபத்தியச் சார்பாகவே இருக்கிறது; சீனாவை எதிர்க்கிறது ஆனால் ஒன்று மட்டும் உறுதி. இப்பிராந்தியத்தின் பாரம்பரியம் மிக்க மக்கள் கிளர்ந்தெழும்பொழுது துங்குவும், சுகார்ட்டோவும் இந்திராவும் இருந்த இடம் தெரியாது போவர். அதுவரை குசுகுசுப் பேச்சுக்களும் நடைபெறத்தான் செய்யும்.

இந்திரா காந்தியின் சுற்றுலா முடிந்ததும் அவுஸ்திரேலிய பிரதமர் கோர்ட்டன் தென்கிழக்காசிய நாடுகளுடன் தமது ''நாட்டிற்குள்ள நட்புறவையும், பிணைப்புக்களையும்'' வலுப்படுத்து முகமாக சுற்றுலா ஒன்றை மேற்கொண்டார். வியட்நாம், இந்தோனேஷியா முதலிய நாடுகளுக்கும் விஜயம் செய்த அவர் ''பாதுகாப்பு'' விஷயமாக கருத்துக்கள் பரிமாறுவாராம். பாதுகாப்பு என்ருல் ஆக்கிரமிப்பு என்பதுதானே பொருள்?

★

அடுத்த வருடம் (1969) காந்திஜியாரின் நூற்றுண்டு வைபவம் இந்தியாவிலும் வேறுபல இடங்களிலும் கொண்டாடப்படும். இதனை மிகப் பெரிய விழாவாகச் சோவியத் யூனியன் கொண்டாடப்போவதாக அறிவித்துள்ளது. அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டு அகிம்சா மார்க்க அரசியல் ''பிதாவை'' நினைவுகூர இருக்கிறது; அமெரிக்காவும் சோவியத் யூனியனும் விழுந்தடித்துக்கொண்டு காந்தியைச் சிறப்பிப்பது தற்செயலான நிகழ்ச்சி அல்ல. ஆழப்பதிந்த காரணங்கள் உள்ளன.

உலகமெங்கும் பலாத்காரத்தைக் கட்டவிழ்த்து விட்டு, அப்பட்டமான மனித விரோதச் செயல்களில் ஈடுபடும் ஏகாதிபத்திய அமெரிக்காவுக்கு அகிம்சை என்ருல் என்னவென்று தெரியாது. தெரியாத்தனமாக அகிம்சையை நம்பிய லூதர்கிங் பட்டப்பகலில் அரசியலாரின் அங்கீகாரத்துடன் கொல்லப்படுகின்றார். வியட்நாமிலும், லத்தீன் அமெரிக்காவிலும் மனித வேட்டையாடும் அமெரிக்கர் அகிம்சையைக் கேள்விப்பட்டிருக்கமாட்டார்கள். எனவே, அமெரிக்கரைப் பொறுத்தவரை அகிம்சை ''ஊருக்கு உபதேசம்; உனக்கல்லடி'' என்பது போலத்தான். உள்நாட்டிலும், உலகெங்கிலும் வேகமாகப் பரவி வரும் புரட்சிகர உணர்வையும் உத்வேகத்தையும் மழுங்கச் செய்யவே காந்தீயம் போன்ற போதனைகள் பயன்படுத்தப்படுகின்றன. இல்லாது விடில், வினோபாவை நடமாடும் இயேசுநாதர் என்று அமெரிக்கத் தூதன் செஸ்டர் போல்ஸ் கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டு கூறுவானு?

நீக்ரோ மக்களது புரட்சிகர எழுச்சி அமெரிக்க ஆளுங் குழுக்களை அஞ்ச வைத்துள்ளது. பல்லாண்டுகளாக ஒடப்பர்களாய் இருந்த கறுப்பு நிறப் பாட்டாளிகள் உதையப்பர்களாய் மாறும் சமயத்தில் அவர்களை அன்பர்களாய் இருக்கும்படி தூண்டக் காந்தீயம் கேவலமான முறையில் உபயோகப் படுத்தப் படுகிறது. யேல் பல்கலைக் கழகத்தில் அண்ணாத்துரை திருக்குறள் போதிப்பது போலத்தான் ஜோன்ஸன் காந்தீயம் பேசுவதும்.

சோவியத் யூனியன் காந்தீயத்தைத் தூக்கிப் பிடிப்பது ஏறத்தாழ இதே காரணங்களுக்காகத்தான். ஏகாதிபத்தியத்துடன் சகோதரத்துவம், சமாதானம், சக ஜீவனம் என்று கூறிக் கொண்டு அதன் உற்ற சகாவாக மாறியுள்ள திரிபுவாதம், லெனின் வகுத்த புரட்சிப் பாதையைக் குழி தோண்டிப் புதைத்து விட்டது. இந் நிலையில் ''அன்பு மார்க்கம்'' போதிக்க, அசல் மனிதராக காந்தியார் கிடைத்துள்ளார்.

காந்தியாரின் வேறு சில பண்புகளும் இன்றைய சோவியத் திரிபுவாதக் கும்பலுக்கு ஏற்றதாக உள்ளன. காந்தி இந்திய முதலாளிகள் அந்நியப் ''பிடி''யிலிருந்து விடுதலை பெறும் அரசியல் மாற்றப் போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர். கோடீஸ்வரன் பிர்லாவின் மளிகையிலிருந்து ராட்டினம் சுற்றியவர். நல்வாழ்வு பெற்றது கைத்தறியாளர் அல்ல; பெரு மில் முதலாளிகள். காந்தி இந்திய முதலாளிகளுக்கு ''சுதந்திரம்'' பெற்றுக் கொடுத்த வணிகர், அல்லது அரசியல் தரகர். அவர் கம்யூனிஸ விரோதியாக இருந்தவர்; வாழ்ந்தவர்; செயற் பட்டவர். அவரைக் கேடயமாகக் கொண்டு பாசிஸ ஆட்சியையே நடத்துகிறது இன்றைய இந்திய ஆளும் வர்க்கம். அன்றும் இன்றும் இந்தியப் பெருமுதலாளித்துவம் மேற்கத்தியச் சார்புடையது. அதன் தலையாய தத்துவப் பிரதிநிதியைச் சோவியத் யூனியன் பெருமளவில் கொண்டாடுவதாயின் அர்த்தமென்ன?

புரட்சியை மழுங்க வைப்பது மட்டுமன்றி, உலகப் பெரு முதலாளித்துவத்துடன் உடன்பாடு கண்டுள்ளது ரஷ்யா. அதன் விளைவே

—11-ம் பக்கம் பார்க்க

### சோவியத் யூனியனில் வேலையில்லாத் திண்டாட்டம்

சோவியத் யூனியனின் கெமிரேவ் என்ற இடத்தில் 30 லட்சம் மக்கள் தான் வாழ்கின்றார்கள் அவர்களில் 90,000 வேலை செய்யக்கூடிய பெண் தொழிலாளர்கள் வேலையின்றிக் கஷ்டப் படுகிறார்கள்.

சோவியத் நாட்டின் சகல பொருளாதாரத் துறைகளிலும் ''வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் அலை அச்சுறுத்துகின்றது'' என்று ''சோவியத் பொருளாதாரம்'' என்ற பத்திரிகை கூறுகிறது. அது மேலும் கூறுகிறது, ''11 கோடி தொழிலாளர்களில் 12 வீதம் உண்மையில் தொழிலில்லாமல் இருக்கின்றனர்.''

சோவியத் யூனியனின் நாசகாரத் திரிபுவாதக் கும்பலின் ''அரும் பெரும் சாதனைகளில்'' வேலையில்லாத் திண்டாட்டமும் ஒரு 'வரப்பிரசாதம்'

-பீ ஆரிலிருந்து

''முதலாவது சோஷலிஸ அரசு சோவியத் யூனியன். சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட்கட்சி லெனினுல் உருவாக்கப்பட்டது. சோவியத் கட்சியினதும் அரசினதும் தலைமை திரிபுவாதிகளால் அபகரிக்கப் பட்ட போதிலும் சோவியத் வெகு ஜனங்கள் நல்லவர்கள் கட்சி அங்கத்தவர்களும், ஊழியர்களும் நல்லவர்கள். அவர்கள் புரட்சியை விரும்புவர்கள். எனவே, திரிபுவாதிகளின் ஆட்சி வெகுகாலம் நிலைத்து நிற்காது என்ற உறுதியுடன் இருக்கும்படி தோழர்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்''

—மாசே-துங்

# முதலாளித்துவத்தை மறுபடி புகுத்த முயற்சிக்கும் சோவியத் திரிபுவாதிகளுக்கு ''ஸ்டாலின் குழு'' கண்டனம்

**சோவியத் யூனியனில் உள்ள ஒரு புரட்சிகர ஸ்தாபனமான - குருஷ்சோவிய திரிபுவாதக் கும்பலுக்கு எதிரான - ''ஸ்டாலின் குழு'' அண்மையில்தலைவர் மாஓ விஞல் ஆரம்பிக்கப்பட்டு நேரடியாக வழிநடத்திச் செல்லப்படுகின்ற சீனுவின் மகத்தான பாட்டாளி வர்க்கப் புரட்சியை உணர்வு பூர்வமாக போற்றுகின்ற கட்டுரை ஒன்றை விநியோகித்துள்ளது. இக்கட்டுரை சோவியத் யூனியனில் மறுபடியும் முதலாளித்துவத்தைப் புகுத்துவதற்காக சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலை வன்மையாகக் கண்டிக்கிறது. சீனுவில் மகத்தான பாட்டாளி வர்க்கப் புரட்சியைக் கேலி செய்வதை எதிர்த்தும் வன்மையாகக் கண்டிக்கிறது.**

''கலாச்சாரப் புரட்சியைப் பற்றிய உண்மை'' என்ற தலைப்பிட்ட இந்தக் கட்டுரை சோவியத் பாட்டாளி வர்க்கத்தின் வீரத்தையும், பாட்டாளி வர்க்கப் புரட்சியை நடத்துவதற்காக அதன் உறுதிப் பாட்டையும் வெளிப்படுத்துகின்றது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சகாப்தத்தில் உறுதியான, கூர்மையான வர்க்கப் போராட்டம் நடைபெறுகின்றது. இரு பாதைகளுக்கு இடையிலான போராட்டம் நடைபெறுகிறது. அதாவது, பாட்டாளி வர்க்கத்தின் பாதைக்கும் முதலாளி வர்க்கத்தின் பாதைக்கும் இடையிலான போராட்டம் நடைபெறுகின்றது என கட்டுரை விளக்கம் தருகின்றது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சரித்திர காலகட்டம் முழுவதிலும் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்தை அடையும் காலகட்டம் முழுவதிலும் வர்க்கப் போராட்டத்தின் பிரதான அம்சம் முதலாளித்துவத்தை மறுபடி புகுத்துவதும் அதனை எதிர்த்துப் போராடுவதுமாகும்.

## 'போக்கிரிகள்!'

''பிரஸ்னேவு கொசிஜினும் போக்கிரிகள்!'' நாம் கூறவில்லை. ஒரு கீவ் தொழிலாளி கூறுகின்ருர். ஏன் தெரியுமா? ''அவர்கள் சோவியத் யூனியனில் முதலாளித்துவத்தைத் திரும்பக் கொண்டு வருகின்ருர்கள். ஆகையினுல் சோவியத் மக்களாகிய நாம் இந்தப் போக்கிரிகளை எதிரிக்கின்ருேம்!''

இதிலும் பார்க்க சிறந்தநற்சாட்சிப் பத்திரத்தை திரிபுவாதிகளுக்கு யார்தான் கொடுப்பார்கள்?

## மூன்று வகைகளில் முதலாளித்துவம் மறுபடி புகுத்தப்படும்

ஒரு சோஷலிஸ நாட்டில் முதலாளித்துவம் மறுபடி புகுத்தப்படுவது மூன்று வகையில் நடைபெறக் கூடும் என கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

1. சோஷலிஸம் வெற்றி பெறுவதற்கு முன் ஆட்சியிலிருந்து துரத்தப்பட்ட—ஆனுல் ஒழிக்கப்படாத சுரண்டும் வர்க்கங்கள் மறுபடியும் ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்றக்கூடியதாயிருக்கலாம்.

2. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பினுல் முதலாளித்துவம் திரும்பப் புகுத்தப்படக்கூடும்.

3. சமாதான பரிணமத்தின் மூலம் முதலாளித்துவம் மறுபடியும் புகுத்தப்படக் கூடும்.

முதல் இரண்டு வகைகளிலும் நடைபெறுகின்ற முதலாளித்துவத்தை மறுபடியும் புகுத்தும் முயற்சியை எதிர்த்துப் போராடுவது சுலபம். ஏனெனில் இங்கு திட்டவட்டமான ஒரு எதிரியை—தெளிவாகக் காணக்கூடிய ஒரு எதிரியை—நமக்கு முன்னுல் காண்கின்ருேம். அடி கொடுக்க வேண்டியது எங்கே என்பது எமக்குத் தெளிவாகத் தெரியும். ஆனுல் சமாதானப் பரிணமம் என்பது வேறு விஷயம். அது மிகவும் அபாயகரமானது; கபடமானது.

## சமாதானப் பரிணமம் அபாயகரமானது

சமாதான பரிணமம் குறிப்பாக, தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் அபாயகரமானது ஏனெனில்:

1. மாறுவேடம் தரித்த எதிரியுடன்—நமது மத்தியிலேயே உள்ள எதிரியுடன் நமது கோஷங்களையே உச்சரித்து ஏமாற்றுகின்ற எதிரியுடன்—முகமூடியைக் கிழித்தெறிவது கடினமாக உள்ள எதிரியுடன் நாம் போராட வேண்டியுள்ளது.

2. சமாதானப் பரிணமத்தின் அபாயம் பொதுவில் குறைத்து மதிப்பிடப்படுகின்றது.

கட்சியினதும் அரசாங்கத்தினதும் தலைமை சீரழிந்து போவதால், சோஷலிஸ அரசினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் இயல்பிலும் உள்ளடக்கத்திலும் படிப்படியாக மாற்றம் ஏற்படுவதுதான் சமாதானப் பரிணமமாகும் என்று கட்டுரை விளக்கம் தருகின்றது. சமாதான பரிணமத்தின் இறுதி வெளிப்பாடு முதலாளித்துவம் மறுபடியும் புகுத்தப்படுவதாகும்.

## முதலாளித்துவச் சித்தாந்தம் சீரழித்து விட்டது

சோஷலிஸ நாடுகளின் சமாதான பரிணமத்தின் அபாயம் இருப்பதற்குக் காரணம், பாட்டாளி வர்க்கம் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் குறுகிய சரித்திரக் காலகட்டத்தில் முதலாளித்துவத்தை வெற்றிகொள்ள முடியும் என்றபோதிலும், சித்தாந்தத் துறையிலான போராட்டம் வெகுகாலம் செல்லும்; ஏனெனில், அது மனிதனின் சிந்தனையோடு சம்பந்தப்பட்ட விஷயம் என கட்டுரை சுட்டிக் காட்டுகின்றது. சோஷலிஸத்தின் புதிய எண்ணங்களும், புதிய வழக்கங்களும் அரசியல் பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டதும் உடனடியாகச் செல்வாக்குப் பெற முடியாது. இதற்குப் போதியளவு காலம் வேண்டும். வெற்றி பெறுவதானுல் நிச்சயம் கூடுதலான காலம் வேண்டும். மேலும் முதலாளித்துவம் நம்மைச் சூழ்ந்துள்ளதால் அதன் நாசகாரச் செல்வாக்கும் நம்மைப் பாதிக்கும். நமக்கு விரோதமான இந்தச் சித்தாந்தம்



தோழர் ஸ்டாலின்

## பாட்டாளி வர்க்க கலாசார புரட்சியை போற்றுகிறது

இலட்சியங்களை ஒழித்துவிடும். கம்யூனிஸ விரோதத்தைப் பரப்பிவிடும், முதலாளித்துவச் சுய நலத்தை வளர்த்துவிடும், தனிச் சொத்துடமை எண்ணத்தைத் தூண்டிவிடும், பணம், குறுகிய தேசியவாதம், வகுப்புவாதம், கொஸ்மொபொலினிட்ஸம் (வர்க்க உணர்வற்ற உலகப் பற்று) மற்றும் முதலாளித்துவக் கோட்பாடுகள் ஆகியவற்றை வளர்த்துவிடும். நமது நாடுகளில் இச் சித்தாந்தத்தின் செல்வாக்கு நமது மக்களைச் சீரழித்தும் முதலாளித்துவ மயப்படுத்தியும் விட்டது. சுருங்கக் கூறினுல் எமது சமூகத்திலும் ஏனைய சோஷலிஸ நாடுகளிலும் பலருக்கு முதலாளித்துவ சித்தாந்த நோய் பரவியுள்ளது. இவர்கள் அரசியல் துரோகிகளாக, பதவி வேட்டைக்காரராக ''கம்யூனிஸ'' அதிகார வர்க்கத்தினராக, தமது சொந்த நலனை மட்டும் கருதுபவர்களாக, பணத்தைக்கட்டி அணைப்பவர்களாக. வெறுமனே சோஷலிஸ விரோதிகளாக, சோஷலிஸத்தை வெறுப்பவர்களாக மாறியுள்ளனர். தவிர்க்க முடியாமல் இப்பேர்ப்பட்ட நபர்கள் கட்சிக்குள்ளும் அதன் தலைப் பீடங்களிலும் ஊடுருவிக்கொண்டனர். பிரதானமாக எமது கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருப்பதால் இதனைச் செய்து கொண்டனர். உண்மையிலேயே இவர்கள் உள்நாட்டு முதலாளித்துவ சக்திகளின் ஏஜெண்டுகள், சுரண்டும் வர்க்கங்களினதும், சர்வதேச ஏகாதிபத்தியத்தினதும் மிச்ச சொச்சங்கள் இவர்கள் சக்தியற்றவர்களாக ஆக்கப்படாவிடில் கட்சியினதும் அரசினதும் அதிகாரத்தைக் கைப்பற்றும் சந்தர்ப்பம் இறுதியில் இவர்களுக்குக்கிடைத்துவிடும்.

## கட்சிக்குள் புகுந்துள்ள ஏகாதிபத்திய முதலாளித்துவ ஏஜெண்டுகள்

கட்சிக்குள் புகுந்தள்ள முதலாளி வர்க்கத்தினதும் சர்வதேச ஏகாதிபத்தியத்தினதும் ஏஜெண்டுகள், மார்க்சிஸ—லெனினிஸத் தலைமையை ஒழித்துக் கட்டுவதன் மூலம் மட்டுமே அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும்.

சோவியத் கட்சியிலும், அரசிலும் குருஷ்சேவ் கும்பல் அதிகாரத்தை அபகரித்துக் கொண்டதை உதாரணம் காட்டி கட்டுரை இதனை விளக்குகிறது. ஸ்டாலின் மரணமடைந்ததிலிருந்துதான் குருஷ்சோவும் அவனது கும்பலும் அதிகாரத்தை அபகரிக்கத் தொடங்கினர் என்று கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. ஸ்டாலின் இறந்ததும் கட்சியிலும் நாட்டிலும் அரசியல் அபி

—11-ம் பக்கம் பார்க்க

**பிரான்சில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியின் பெறுபேறு எப்படியிருப்பினும், சென்ற மாதம் அங்கு ஏற்பட்ட குழப்பத்திற்குப் பின்னர், பிரான்சின் அரசியல் முன்னிருந்தது போல் இருக்காது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.**

# பிரான்சில் என்ன நடந்தது?

**எமது அரசியல் நிருபர்**

சென்ற வாரம் பிரான்சில் நடைபெற்ற சம்பவங்களைச் சிலர் புரட்சியென விபரித்துள்ளனர். ஒரு விதத்தில் அது ஒரு விதப் புரட்சியேயாகும். ஏனெனில், அது 1789ல் நடைபெற்ற மாபெரும் பிரஞ்சுப் புரட்சியையும் 1871ல் நடைபெற்ற பாரிஸ் கம்யூனையும் நினைவு படுத்திற்று. எனினும் அவற்றை ஒரு புரட்சியெனக் கொள்ளமுடியாது. ஏனெனில், அதனல் அரசு ஆதிக்கம் கைமாறப் படவில்லை. எப்படியிருப்பினும், என்றுமே மறக்க முடியாத இச் சம்பவங்களின் தாக்கம் எதிர்காலத்திற்கு ஒரு வழி காட்டியாக இருக்கும்.

கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் உலவும் பிரெஞ்சு நவீன திரிபுவாதிகள் உட்பட உத்தியோக ரீதியான சகல கட்சிகளினலும் முன் கூட்டியே அறிந்து கொள்ள முடியாத இந்த அரசியல் புரட்சி எப்படி ஏற்பட்டது? அது ஏற்படுவதற்கு மாணவர்களின் அமைதியின்மையே காரணமாக இருந்தது. பாரிஸ் மாணவர்களின் குறைபாடுகள் உண்மையானவையாகும்.

சென்ற பத்து வருட காலத்தில் பிரான்சிலுள்ள பல்கலைக் கழக மாணவர்களின் தொகை 170,000 லிருந்து 514,000 ஆக உயர்ந்து விட்டது. இத் தொகையில் ஏறக்குறைய மூன்றிலொரு பகுதியினர் பாரிஸிலேயே இருந்தனர். அங்கு சொபோன் எனும் அப் பல்கலைக் கழகத்தில் உள்ள நூல் நிலையம் ஒரு நூறு மாணவர்களை மட்டுமே அடக்கக் கூடியதாயிருந்தது. இந்த நெருக்கடியை ஒருவாறு தீர்க்கு முகமாக இன்னுமொரு பல்கலைக் கழகம்—நொன்ரேர் பல்கலைக் கழகம்—பாரிஸ் நகரத்திற்கு வெளியே நான்கு வருடங்களுக்கு முன்பு நிறுவப் பட்டது. ஆனல், அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் தொகை 2,000 லிருந்து 10,000 ஆக அதிகரித்து விட்டது இங்கு கூட ஆயிரக்கணக்கான மாணவர்கள் நெருக்கி அடித்துக் கொண்டு ஆசிரியர்களின் விரிவுரைகளைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது, இன்னும் ஆயிரக் கணக்கான மாணவர்கள் வெளியே கியூவில் நிற்கும் நிலைமை வழக்கமாகி விட்டது.

இந்த நிலைமையே இயற்கையாக மாணவர்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது. இந்த அமைதியின்மையை எதிர் நோக்குவதில் பல்கலைக் கழக நிர்வாகிகள் கைக்கொண்ட சிறுபிள்ளைத் தனமும், மாணவர்களை அடக்குவதற்குப் பிரெஞ்சுப் பொலிசார் கடைப் பிடித்த கழிசடை மூர்க்கத் தனமுமே இந்த நெருக்கடி பெருஞ் சுவாலையாக மாறுவதற்குச் சிறு நெருப்புப் பொறியாக அமைந்தது.

நொன்ரேர் பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு வருடத்திற்கு முன்னர் மாணவர்கள் வசிக்கும் இடங்களுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த உடனேயே இவையாவும் ஆரம்பித்தன.

வழமையான பிரெஞ்சு முறையில் ஒரு வித சமரசம் ஏற்படுத்தப் பட்டு இந்த விஷயம் தீர்க்கப்பட்டது. ஆனல் பல்கலைக் கழக வளவுக்குள் ரகசியப் பொலிசார் நிறுத்தப் பட்டனர். இப் பொலிசார் தங்களை ரகசியமாகப் படமெடுக்கிறார்கள் என மாணவர்கள் சந்தேகித்தனர். பொலிசாருக்கும் மாணவர்களுக்கும் ஏற்பட்ட முரண்பாடிற்கு இதுவே ஆரம்பமாக இருந்தது. ஒரு பிரெஞ்சுப் பல்கலைக் கழக வளவுக்குள் பொலிசார் என்றுமே காலடி எடுத்து வைத்ததில்லை. இது பழங் காலத்திலிருந்தே பேணப்பட்டு வரும் மரபாகும். பல்கலைக் கழக வளவுக்குள் பொலிசார் தங்கியுள்ளனர் என்பதை மாணவர்கள் அறிந்து கொண்டதும் நொன்ரேர் பல்கலைக் கழக மாணவர்கள் சென்ற நவம்பரில் வேலை நிறுத்தம் செய்தனர் நிர்வாகிகள் அடிபணிந்தனர். இவ் வகையில் மாணவர்கள் தமது முதலாவது வெற்றியைப் பெற்றனர். இதன் மூலம் நேரடி நடவடிக்கையின் சாதனையை அவர்கள் அறிந்து கொண்டனர். இவ் வருடம் ஜனவரி மாதத்தில் மறுபடியும் குழப்பம் ஏற்பட்டது. பல்கலைக் கழக நிர்வாகிகள் ஒரு விதத் தான் தோன்றிப் போக்கில் பொலிசாரை வரவழைத்தனர். நிர்வாகிகளின் இச் செய்கை மாணவர்களை மட்டுமல்லாமல் முற்போக்கு ஆசிரியர்களையும் கொதிப்படையச் செய்தது. பின்னர் பொலிசாருக்கும் மணவர்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பில் பொலிசார் பின் வாங்கினர். மாணவர்களின் புரட்சி ஆரம்பமாயிற்று.

இம்மாணவர்கள் ஒரு சரியான தத்துவத்தினல் உந்தப் பட்டார்கள், அல்லது சரியாக அமைக்கப்பட்ட ஒரு கட்சியினல் வழி நடத்தப்பட்டார்கள் என்ற முடிவுக்கு வருவது தவறு பலதரப்பட்ட கருத்துக்களுடைய மாணவர்கள் அவர்கள் மத்தியில் உள்ளனர். சிலர் அராஜகவாதிகள், சிவர் ட்ரொட்ஸ்கிஸவாதிகள், இவ்வாறு இன்னும் பலதரப்பட்ட அரசியல் கருத்துக்களுடைய மாணவர்கள் உள்ளனர். ஆனல் மாணவர்களில் பலர் மாசே-துங் சிந்தனையினல் ஆகர்ஷிக்கப்பட்டார்கள் என்பதில் எதுவித சந்தேகமே இல்லை பிரெஞ்சு மொழியில் வெளியிடப் பட்ட ''மாசே-துங் மேற்கோள்கள்'' கோடிக்கணக்கில் பிரெஞ்சில் விற்கப்பட்டது வீண் போகவில்லை. மாணவர்கள் வாழும் பகுதிகளில் தலைவர் மாசே-துங்கின் படங்கள் தொங்கத் தொடங்கின. அதே போல் அவரின் மேற்கோள்களும் தலைகாட்டத் தொடங்கின சிலர் இச்சம்பவங்களை ஒருவித சீன கலாச்சாரப் புரட்சியெனக் குறிப்பிட்டனர். உண்மையில், பிரெஞ்சுத் தொழிற் சங்கத் தலைவர் ஒருவர் ''ஒரு விதத்தில் சீனத்தை ஒத்திருக்கின்ற-ஒருவித கலாச்சாரப் புரட்சியென நான் எண்ணுகின்றேன். ஒரு புதிய பாத்திரதை வகிக்குமாறு பழைய தலைவர்கள் கேட்கப்பட்டுள்ளனர். ஆனல் அவர்கள் அதற்குத் தயாராகவில்லை'' என கூறியுள்ளார்.

இம்மாணவர் இயக்கத்திற்குத் தலைமை தாங்கியவர் கொன்-பென்டிற் என்பவராகும். அவருடைய தகப்பனர் ஒரு ஜெர்மானியர். தாயார் பிரெஞ்சுக்காரி. ஆனல் கொன்-பென்டிற் பிறந்து வளர்ந்தது பிரெஞ்சு நாட்டிலாகும். அவர் பின்னர் ஜெர்மன் பாஸ்போட்டைப் பெற்றுள்ளார். இந்தப் பாஸ்போட்தான் அவரைப் பிரானசுக்கு வெளியே வைத்திருப்பதற்கு அரசாங்கத்திற்கு உதவியது. அவருடைய தலைமையில் தான் மாணவர்கள் அணி திரண்டனர்.

மார்ச் மாதம் 19-ந் தேதி பாரிஸில் வியட்நாமுக்கு ஆதரவாக மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வழமை போல் பல மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் நொன்ரேரில் கல்வி பயின்ற பழைய மாணவராகும். நொன்ரோ பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தையே சில மணி நேரம் கைப்பற்றி வைத்திருந்தனர். இச் சம்பவங்கள் மார்ச் மாதம் 22-ந் தேதி நடைபெற்ற காரணத்தினல் அவர்கள் அதனை மார்ச் 22-ந் தேதி இயக்கம்'' என அழைத்தனர்.

நிர்வாகிகளுக்கு என்ன செய்வதென்றே புலப்படவில்லை: மாணவர்களுக்கு எதிராக ஒரு வித நடவடிக்கையும் எடுக்காவிடில் தாம் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அப் பல்கலைக்கழகத்திலுள்ள பேராசிரியர்களில் அரைவாசிப் பேர் பயமுறுத்தினர். நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனை எதிர்ப்பதற்கு அரைவாசிப் பேர் தயாராக இருந்தனர். இறுதியில் பல்கலைக்கழகமே மூடப்பட வேண்டியதாயிற்று. இரண்டில் ஒன்று பார்த்து விடுவதென நிர்வாகிகள் முடிவெடுத்துக் கொண்டு கொன்-பென்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பாரிஸ் பல்கலைக்கழகத்தின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவுக்கு அறிவித்தனர். அவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப் படும் நிலைமை ஏற்பட்டது.

நொன்ரோ பல்கலைக்கழகம் மூடப்பட்டுவிட்டதனல் தனக்கெதிரான குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிப்பதற்காக அவர் சொபோன் பல்கலைக் கழகத்திற்குச் செல்ல வேண்டியதாயிற்று. அவர் அங்கு சென்றதால் சொபோனில் நீறுபூத்த நெருப்பைப் போலிருந்த அமைதியின்மை வெளிப்படத் தொடங்கியது. கொன்-பென்டிற் சொபோனுக்குச் சென்ற போது தன்னுடன் 400 மாணவர்களையும் நொன்ரேயிலிருந்து அழைத்துச் சென்றிருந்தார். இவர்களுடன் சொபோன் மாணவர்களும் ஐக்கியப்பட்டனர். மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை முறியடிக்கத் துடித்த வலதுசாரி மனப்பான்மை கொண்ட மாணவர்களும் அங்கிருந்தனர். பொலிசாரும் குழப்பத்தை அடக்க, பட்டாளத்தினரும் அவர்கள் எதிர்பார்த்திருந்த வேலையைச் செய்தனர்.

பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறுமாறு நிர்வாகிகள் மாணவர்களை வேண்டிக் கொண்ட போதிலும் பொலிசாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் பல இடங்களில் போராட்டம் மூண்டது. பொலிசாரும் மாணவர் பலரைக் கண்ட கண்ட இடத்தில் அடித்துத் துன்புறுத்தினர். சொபோன் பல்கலைக் கழகமும் மூடப்பட்டது. இப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு எழுநூறு வருடங்கள் கடந்து விட்ட போதிலும் இதுவரை அப் பல்கலைக் கழகம் ஒரேயொரு முறைதான் மூடப்பட்டது. அது ஹிட்லர் பிரான்சை ஆக்கிரமித்துக் கைப்பற்றியிருந்தபோதாகும் பொலிசாரின் அட்டூழியங்களின் பெறுபேறாக 'மே 3-ந் தேதி இயக்கம்'' என இன்னெரு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியர்களும் மாணவர்களும்

—12ம் பக்கம் பார்க்க



மே 17ந் தேதி பாரிஸ் மாணவர்கள் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் நடத்தியபோது, தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல் எழுப்பினர்.

# மறக்க முடியாத சம்பவங்கள்

இளங்கீரன்

**1967 ஜூன் 5 ந் தேதி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தூண்டுதலின் பேரில் இஸ்ரேல் அரபியர் மீது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடங்கி இந்த வருடம் ஜூன் மாதம் 5-ந் தேதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது. ஜூன் 5-ந் தேதி என்றதும் ஏகாதிபத்தியவாதிகளின் அரசியல் மோசடிகளையும் அவர்களுக்கு அனுசரணையான சோவியத் திரிபுவாதிகளின் காட்டிக் கொடுப்புகளையும் பின்னணியாகக் கொண்ட சம்பவங்கள் மீண்டும் ஒரு முறை நினைவுக்கு வருகின்றன.**

சென்ற இதழில், அராபிய மக்கள் மீது இஸ்ரேல் தொடுத்த ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு உதவியாக இருந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பின்னணியை விபரித்தோம். இந்த இதழில், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அராபிய மக்களின் எதிர்ப்பையும், சோவியத் நவீன திரிபுவாதிகளின் துரோகத்தையும் பார்ப்போம்.

## அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக
## அராபியர்களின் ஆர்ப்பாட்டம்

இஸ்ரேலின் தாக்குதலுக்கு அமெரிக்கத் தூண்டுதலும், ஒத்துழைப்பும் உண்டு என்பது ஆதாரபூர்வமாகத் தெரியவந்ததும் முழு அராபிய உலகும் அமெரிக்க ஏகாதிபத்திற்கெதிராகக் குரல் எழுப்பியது.

ஜூன் 6-ந் தேதி சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸில் ஆயிரக்கணக்கானோர் அமெரிக்க தூதராலயத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ஜூன் 7-ந் தேதி சிரியாவின் நகரமான அலப்போவில் பல நூற்றுக்கணக்கான மக்கள் அமெரிக்க-எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள். "அமெரிக்க-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே அராபியர்களின் ஜன்ம சத்துரு!" என்று கோஷமிட்டுக் கொண்டே அமெரிக்க, பிரிட்டிஷ் கொன்ஸுலேட் காரியாலயங்களுக்குத் தீ வைத்தனர்.

அல்ஜீரியாவின் தலைநகரான அல்ஜீயர்ஸில் பல்லாயிரக்கணக்கான அல்ஜீரிய மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் ஜூன் 5-ந் தேதி தலைநகரிலுள்ள அமெரிக்க கலாச்சார நிலையத்தை மிகுந்த ஆவேசத்துடன் நொறுக்கித் தள்ளினார்கள். கலாச்சார ஊடுருவல் நடத்தும் அந்த நிலையத்தை மூன்று மணி நேரங்களாகத் தாக்கித் தகர்த்தார்கள். "ஜோன்சன் ஒரு கொலைகாரன்!" என்று விண்ணதிரக் கோஷித்தனர்.

டுனிசிய நாட்டின் தலைநகரான டுனிசில் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஐந்து மணித்தியாலங்களுக்கும் மேலாக அமெரிக்க-எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அமெரிக்கத் தூதராலயத்தின் முன்பாக நின்று "அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக!" "ஜோன்சன் ஒரு கொலைகாரன்" என்றும் இன்னும் பல எதிர்ப்புக் கோஷங்களையும் போட்டனர். அது மட்டுமன்றி தூதராலயத்திற்குள் புகுந்து அங்குள்ள புத்தகங்களையும், தஸ்தாவேஜுகளையும் வீதியில் தூக்கி வீசினர். அமெரிக்க கலாச்சார நிலையத்தையும், அமெரிக்க சர்வ தேசிய அபிவிருத்தி ஏஜென்ஸியையும் அவர்கள் தாக்கினர்.

லெபனானின் தலைநகரான பெய்ரூத்தில் ஜூன் 6-ந் தேதி கிட்டத்தட்ட மூவாயிரம் மக்கள் அமெரிக்க-எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள். அவர்கள் அமெரிக்க—எதிர்ப்பு சுலோகங்களை எழுப்பியதுடன் அமெரிக்கக் கொடியையும் கிழித்தெறிந்தனர். தூதராலயத்திலுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஆர்ப்பாட்டக்காரர்களின் மீது சுட ஆரம்பிக்கு மளவுக்குச் சென்றதுடன் அவர்களில் பலருக்குக் காயம் ஏற்படுத்தினர். கடுங்கோபமுற்ற லெபனான் மக்கள் அமெரிக்கத் தூதராலயத்திற்குத் தீமூட்டினர். ஜூன் 6-ந் தேதியிலிருந்து மூன்று நாட்களாக சூடானிய மக்கள் கார்டூமில் மிகுந்த ஆவேசமுள்ள அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். "இஸ்ரேலுடனுள்ள அமெரிக்க—பிரிட்டிஷ் கூட்டுறவை எதிர்க்கின்றோம்" என்று முழங்கினர். அதோடு மீண்டும் ஒருமுறை சூடானிய தலைநகரிலுள்ள அமெரிக்க கிளப்பைத் தாக்கி அதற்குத் தீயும் வைத்தனர்.

யெமன் நாட்டின் பிரதான நகரான டாயிஸில் 8-ந் தேதி மக்கள் ஊர்வலமும் கூட்டமும் நடத்தினர். "அராபிய நாடுகள் வாழ்க!" "அமெரிக்க, பிரிட்டிஷ் காலனியாதிக்க வாதிகளும், அவர்களின் கைக்கூலி இஸ்ரேலும் ஒழிக!" என்ற கோஷங்கள் வீதிகள் முழுதும் ஒலித்தன. அத்துடன் அமெரிக்கத் தூதராலயத்தைத் தாக்கி எல்லா ஜன்னல்களையும் நொறுக்கினர். தூதராலயத்தின் எல்லாக் கார்களையும் நாசப்படுத்தினர். இதற்கு முன்னர், யெமனின் தலைநகரான சனாவில் அமெரிக்க கலாச்சார காரியாலயத்தை மக்கள் தகர்த்தனர்.

பிரிட்டிஷ் அதிகாரத்திலுள்ள தென்-யெமனில் தேசிய ஸ்தாபனங்களும் தென் யெமனின் விடுதலைக்கான முன்னணியும் (பிலாசி) அதோடு தேசிய விடுதலை முன்னணியும் பிரிட்டிஷ் எண்ணெய்ச் சுத்திகரிப்பு மற்றும் பிரிட்டிஷ் நிலையங்களைத் தகர்க்குமாறு தனித்தனியே மக்களுக்கு அறைகூவல் விடுத்தன. ஜூன் 6-ந் தேதி பல தொழிலாளர்களினதும், சாய்ப்புச் சிப்பந்திகளினதும் வேலைநிறுத்தம் ஏடன் நகரத்தை ஸ்தம்பிக்கச் செய்தது.

மௌரித்தானியா, லிபியா, மொரோக்கோ ஆகிய நாடுகளின் தலைநகரங்களான நௌகூட், பெங்ஹாசி, ரபாத் ஆகியவற்றிலும் பலத்த அமெரிக்க—எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இனி சோவியத் திரிபுவாதிகளின் கழுத்தறுப்பைக் கவனிப்போம்.

## ஆக்கிரமிப்புத் தாகம்கொண்ட இஸ்ரேலுடன்
## திரிபுவாதிகளின் கொண்டாட்டம்

சோவியத் திரிபுவாதிகள் அரசியல் தலைமைப்பீடத்தைக் கபடத்தனமாக அபகரித்ததிலிருந்து அமெரிக்கத் தலைமையிலுள்ள ஏகாதிபத்தியத்திற்குத் துணைபோகும் விதத்திலேயே செயற்பட்டு வந்தனர்; வருகின்றது. இத் துரோகிகளான நவீன ஜார்கள் கியூபா, கொங்கோ, டொமினிக்கன் குடியரசு, ஈராக் முதலிய நாடுகளில் மக்கள் இயக்கங்களுக்கு இழைத்த துரோகப் படலம் உலகம் முழுவதற்கும் தெரியும். இந்தோனேசியாவில் லட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகளையும், தேச பக்தர்களையும் படுகொலை செய்த சுகார்த்தோ—நாசூதியன் கொடுங்கோலர்களுடன் கூடிக் குலாவுகின்றனர். மலேயாவில் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்து, கம்யூனிஸ்டுகளையும், தேச பக்தர்களையும் நரவேட்டையாடும் ஏகாதிபத்தியக் கைக்கூலியான துங்குவின் அரசாங்கத்தை மோகித்து அதனுடன் புதுஉறவு வைத்துச் சல்லாபமிடுகின்றனர். நடுநிலைமைப் போர்வையில் ஏகாதிபத்தியத்திற்கு மிக நாசூக்காகத் தொண்டுசெய்து வரும் இந்தியப் பிற்போக்கு அரசாங்கம் மக்கள் சீன குடியரசுடன் சண்டையிட்டபோது, இந்தியப் பிற்போக்கு அரசுக்குப் பக்கத் துணையாக நின்று சோஷலிஸ நாடான மக்கள் சீனத்திற்கு இரண்டகம் செய்தனர். காஷ்மீர் பிரச்சினையில், காஷ்மீர் மக்களின் அபிலாஷைகளுக்கு—அவர்களின் சுயநிர்ணய உரிமைக் கிளர்ச்சிக்கு விரோதமாக, காஷ்மீரை முற்றாக விழுங்கி வைத்திருக்க விரும்பும் ஆதிக்கப் பேராசைக்காரரான இந்தியப் பிற்போக்கு ஆட்சியினரை ஆதரித்து நிற்கின்றனர். வீரஞ் செறிந்த வியட்நாமியரின் விடுதலை யுத்தத்தையும் இடையில் முறித்துவிட ஏகாதிபத்தியவாதிகளுடன் திரைமறைவு வேலைசெய்கின்றனர். இப்போது பிரான்சில் நடக்கும் மாபெரும் மக்கள் எழுச்சிக்கு முட்டுக்கட்டை போட முயல்கின்றனர். சுருங்கச் சொன்னால் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் தேசிய — விடுதலை இயக்கங்களை — இப்போது மேற்கு ஐரோப்பாவெங்கும் நடக்கும் பிற்போக்கு அரசாங்கங்களுக்கு எதிரான மக்கள் இயக்கங்களைக் காட்டிக் கொடுக்கும் துரோக வேலைகளை வெகு நைஸாகச் செய்து வருகின்றனர். (மூக்கறுபடவும் செய்கின்றனர்) இதன் மூலம் அமெரிக்கத் தலைமையிலுள்ள ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக்கும், ஏகாதிபத்தியத்திற்குப் பந்தம் பிடிக்கும் பிற்போக்கு அரசாங்கங்களுக்கும் உதவி வருகின்றனர்-

இதே போன்றுதான் அராபிய மக்களுக்கும் துரோகம் செய்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் செய்யப்பட்ட இஸ்ரேலின் பலாத்கார ஆக்கிரமிப்பைப் பாதுகாத்தனர். சோவியத் திரிபுவாதிகளின் இந்தக் காட்டிக் கொடுப்பு உடனடியாக அராபிய மக்களுக்கும், ஏனைய உலகுக்கும் தெரியவந்ததும் அவர்கள் அடித்த பல்டிகளும், கூறிய பசப்பு வார்த்தைகளும் ஜெகப்பிரசித்தம். தாங்கள் அராபிய மக்களின் நண்பர்கள் தாம் என்று திரும்பவும் நாடகமாடினர். ஆனால், அது எடுபடவில்லை.

பாலஸ்தீன் அராபியருக்குச் சொந்தமான பூமியை அமெரிக்க — பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் பறித்து அதில் சட்ட விரோதமான முறையில் இஸ்ரேலைச் சிருஷ்டித்ததும் அதனை அங்கீகரித்த நாடுகளில் சோவியத் யூனியனும் ஒன்று என்பதை முதலில், இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். இது, அப்போது சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கையில் இழைக்கப்பட்ட பெரும் தவறு என்பதும் ஒத்துக்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். 1953க்குப் பிறகு — குருஷ்சோவ் கும்பல் ஆட்சிக்கு வந்தபிறகு சோவியத் — இஸ்ரேல் உறவு பலப்பட்டது.

இஸ்ரேலுடன் சோவியத் யூனியன் செய்யும் வர்த்தகம் சமீப காலத்தில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்துள்ளதாக பிரிட்டனிலிருந்து வெளிவரும் வாரப் பத்திரிகையான "எக்கனமிஸ்ட்" குறிப்பிட்டிருந்தது. 1966ல் முதல் 11 மாதங்களில் கிட்டத்தட்ட 20 லட்

10-ம் பக்கம் பார்க்க

## திரிபுவாதிகள் பற்றி மா ஓ

திரிபுவாதம் அல்லது வலதுசாரிச் சந்தர்ப்பவாதம் வரட்டுத் தத்துவத்தையும் விட அதிக அபாயகரமான ஒரு முதலாளித்துவச் சிந்தனைப் போக்கு. திரிபுவாதிகள், வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் மார்க்சிஸத்திற்கு வாயளவில் தொண்டாற்றுகின்றனர். அவர்களும் "வரட்டுத் தத்துவ வாதத்தை" தாக்குகின்றனர். ஆனால் அவர்கள் உண்மையில் தாக்குவது மார்க்சிஸத்தின் சாராம்சத்தையே. அவர்கள் பொருள் முதல் வாதத்தையும் இயக்கவியலையும் எதிர்க்கின்றனர், அல்லது திரித்துரைக்கின்றனர்; மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பங்கையும் எதிர்க்கின்றனர், அல்லது பலவீனப்படுத்த முயல்கின்றனர். சோஷலிஸ மாற்றியமைத்தலையும், சோஷலிஸ நிர்மாணத்தையும் எதிர்க்கின்றனர், அல்லது பலவீனப் படுத்த முயல்கின்றனர், எமது நாட்டில் சோஷலிஸப் புரட்சியின் அடிப்படை வெற்றிக்குப் பிறகு, முதலாளித்துவ அமைப்பை மீண்டும் ஏற்படுத்தலாமென வீண் நம்பிக்கை பாராட்டுபவர்களும் தொழிலாளி வர்க்கத் தத்துவார்த்த முனை உட்படச் சகல முனைகளிலும் எதிர்த்துப் போராடுபவர்களுமான பல நபர்கள் இன்னமும் இருந்து வருகின்றனர். இந்தப் போராட்டத்தில் இவர்களின் வலது கையாக விளங்கும் ஆட்கள் திரிபுவாதிகளே ஆவர்.

—மா ஓ

# கைரேகை சாஸ்திரம் சுரண்டும் வர்க்கத்தின் தந்திர வித்தை

பண்டைக் காலந் தொட்டு நிலவிவரும் மூட நம்பிக்கைகள் பல. அன்று உயர் சாதியினர் என்று தம்மைக் கருதிக் கொண்டவர்கள் தமது குலப் பெருமையைக் காப்பதற்காக இம்மூட நம்பிக்கைகளைத் தொடர்ந்து பாதுகாத்து வந்தனர். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களை தமது சுரண்டலுக்குச் சாதகமாகப் பயன்படுத்தவே இவை தொடர்ந்தும் பாதுகாக்கப்படுகின்றன. தம்மை உயர் சாதியினர் என எண்ணிக்கொண்டோர் இம்மூட நம்பிக்கைகளை தாழ்ந்த சாதியினர் என கருதப்பட்டோரும் பாமர மக்களும் நம்பும்படியாக அவர்கள் மத்தியிலும் இக்கருத்துக்களைப் பரப்பினார்கள். இதனால், உயர்ந்த வர்க்கம்—உயர்ந்த சாதி என்ற தமது நிலையிலிருந்து கொண்டே பிறரை ஆட்டிப் படைத்தனர்.

## எத்தர்களின் ஏமாற்றத்துக்கு பலியாகாதீர்

## மூட நம்பிக்கைகளை முற்றாக முறியடித்து

## விஞ்ஞான சிந்தனைக்கு முன்னேறுவீர்

கைரேகைகளின் ஆரம்பத்தைச் சிறிது சிந்தித்துப் பார்ப்போம். ஒரு தாயின் வயிற்றில் வளரும் சிசுவின் கை கால்கள் 3 முதல் 6 மாத கால எல்லையுள் வளர்ச்சி அடைய ஆரம்பிக்கின்றன. 6 மாதங்கள் கடந்த பின்னர் சாதாரணமாக விரல்கள் நன்கு வளர்ச்சி அடைகின்றன. இக்கால எல்லையில் கைவிரல்கள் இயற்கையாகவே மடிபட்ட நிலையிலேயே இருக்கும், இந்த மடிப்பின் காரணமாக சிசுவின் கைகளில் ரேகைகள் அமைகின்றன. குறிப்பிட்ட கைரேகைகள் சிசு செய்த பாவ புண்ணியங்களுக்கோ அல்லது கர்மங்களுக்கு ஏற்பவோ அமைவது இல்லை. ஏழை—பணக்காரன் என்ற வித்தியாசமும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டப்படுவதில்லை. சிலகுழந்தைகள் பிறக்கும் போது ஐந்து விரல்களுக்குப் பதிலாக ஆறு விரல்களுடன் பிறக்கின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் ஹோமோன்களேயாகும். பத்து மாதங்கள் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும் குழந்தைகள் பிறந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகும்வரை தமது கைகளை மடித்தே வைத்திருக்கின்றன; இம் மடிப்பின் காரணமாக படிகின்ற கைரேகைகள் குழந்தை வளரும்போது மற்றைய உடல் உறுப்புக்களைப் போல் வளர்ச்சி அடைய ஆரம்பிக்கின்றன.

### கவலைக்குரிய விஷயம்

இக் குழந்தை வளர்ந்த பின் ஏதோ ஒரு தொழிலில் ஈடுபடுவது நிச்சயம். அக் குழந்தை ஒரு தொழிலாளியாகவோ, விவசாயியாகவோ மாறினால் தன் தொழிலில் கைகளை அதிகமாகப் பாவிக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும். இது காரணமாக சில ரேகைகள் தேய்ந்து மறைந்து விடுகின்றன. உடலுழைப்பில் ஈடுபடாத பணக்கார வர்க்கத்தின் கைரேகைகள் மேலும் பல கைரேகைகளைப் படர்ந்த வண்ணம் அழகாக வளர்ச்சி அடைகின்றன, கடுமையான உழைப்பில் ஈடுபடும் தொழிலாளர்களதும் — விவசாயிகளதும் கைரேகைகள் வெட்டப்பட்டும் பிற வழிகளாலும் சிக்கலானவையாக மாறுவதுடன் சின்னாபின்னமடைகின்றன. இதனிடையே அன்று சொத்துடைமையின் சின்னங்களாக அமைந்த அரச குடும்பங்களுக்கும், நிலப் பிரபுக்களுக்கும் பந்தம் பிடித்த அவர்களின் அடி வருடிகள் இத்தகைய மூடக் கொள்கைகளை புத்தகங்களில் எழுதி வைத்தனர், இக் கொள்கைகளைப் பின்பற்றும் பிற்போக்கு வாதிகள் எமது சமூகத்திலும் விஞ்ஞான முன்னேற்றம் அடைந்த பல மேற்கு நாடுகளிலும் வாழ்கின்றனர். இவர்களுக்கு வக்காலத்து வாங்கும் முறையில் எமது தொழிலாள—விவசாய அணிகளைச் சேர்ந்தவர்களும் கைரேகைச் சாஸ்திரத்தில் அடைக்கலம் புகுதல் கவலைக்குரியதாகும்

### உண்மையை அறியா அப்பாவித்தனம்

கஷ்டப்பட்டு உழைத்து அற்ப சொற்பக் காசையும் எசுத்துச் செல்லும் தொழிலாளியும் விவசாயியும் சாத்திரக்காரன் எனக் கூறித் தம்பட்டமடித்துக் கொள்பவனிடம் சென்று பயத்துடனும், விரக்தி மனப்பான்மையுடனும் திரும்புகிறான். சாத்திரக்காரனும் எதிர் வரும் மாதம் தீங்கு விளைவிக்கக் கூடியது என்றும், கிரகங்கள் சரியுயில்லை என்றும். கஷ்டங்கள் வரும் என்றும் இன்னும் பல புளுகுகளையும் கூறி அனுப்பி விடுகிறான். அப்போது விவசாயியின் அல்லது தொழிலாளியின் உள்ளத்தில் ஒரு வித பயமும் வாழ்வில் அவ நம்பிக்கையும் ஏற்படுகின்றது தனது உறுதியையும் இழக்கின்றான். அந்நாள் முதல் அவன் எப்போதும் கவலைப்படுவான். தனது கஷ்டங்களுக்குக் காரணம் சுரண்டும் முதலாளித்துவ சமூக அமைப்பு என்பதையும் அச் சமூக அமைப்பைத் தகர்த்து எறிவதற்கு ஸ்தாபன ரீதியாகப் போராட வேண்டும் என்பதையும் மறந்து விடுகின்றான். தொழிற் சாலையில் திறமையாக வேலை செய்யவும் முடிவதில்லை. விவசாயிக்கு சிறப்பான முறையில் தனது அன்றாடக் கருமங்களில் ஈடுபட முடிவதில்லை. தனது நெற்பயிர்களுக்குத் தேவையான பாதுகாப்புக்களை எடுக்க அவன் தவறி விடுகின்றான். மறுபுறத்தில் பயிர்களுக்குத் தேவையான பசளைகள் வாங்க வழியின்றி துன்பப்படுகின்றான். இதற்கான அடிப்படைக் காரணங்களைத் தர்க்க ரீதியாகச் சிந்திக்கத் தவறுவதால் தொழிலாளியும் விவசாயியும் இதர ஏழைப் பாமர மக்களும் படும் கஷ்டமும் துன்பமும் கொஞ்ச நஞ்சமல்ல.

### சுரண்டலுக்கு உற்சாகமூட்டுகிறது

ஒரு பெரிய பணக்காரன் பெருமளவு செலவு செய்து பெரிய இடத்தில் சாத்திரம் கேட்கின்றான். அவனுடைய கைரேகைகள் பெரும் அதிர்ஷ்டசாலி என்பதை எடுத்துக் காட்டுகின்றன என்று பணக்காரனுக்குத் தனது வாழ்விலும் சுரண்டலிலும் மேலும் உறுதியான நம்பிக்கை ஏற்படும் விதத்தில்—சாத்திரம் கூறப்படும். இதனால் மகிழ்ச்சி அடையும் அவன் தனது சுரண்டலை மென் மேலும் தொடர்ந்தும் கொடூரமான முறையில் நடத்துகின்றான். மேலும் மேலும் அவன் அநியாயமான முறையில் பணத்தை வட்டிக்குக் கொடுப்பான்; பல மடங்கு பணமும் பெறுவான். கைரேகைச் சாத்திரத்தின்படி அவன் அதிர்ஷ்டசாலி அல்லவா?

ஆனால், இதற்கு அடிப்படைக் காரணத்தை விஞ்ஞான ரீதியாகச் சிந்தித்தோமா? ஏழைத் தொழிலாளி தனது கடும் உழைப்பின் காரணமாக கைரேகைகள் மாற்றமடைவதை விஞ்ஞான ரீதியாக உணர முடிவதில்லை. உடலுறுப்புக்களில் நுண்ணிய பல மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் இருப்பதை நாம் விஞ்ஞான மூலமாக அறிகின்றோம். இந்த நுணுக்கமான உண்மையை அடிப்படையாகக் கொண்டே குழந்தை வாலிபனாகவும், வாலிபன் வயோதிபனாகவும் மாற்றமடைகின்றான். விஞ்ஞான முறையில் சிந்திக்கப் பழக்கப்படாத காரணத்தால் தொழிலாளர்களும் விவசாயிகளும் உண்மையை அறியாது கைரேகைச் சாத்திரங்களுக்கு அடிமையாகின்றனர்.

கைரேகைச் சாத்திரத்தின் உண்மை பொய்மைபற்றி விஞ்ஞானக் கண்ணோட்டத்தோடு ஆராயாமல் ஏற்றுக் கொள்வதன் மூலம் எமது உறுதியான தன்மை தளர்ச்சி அடைகின்றது. உள்ளம் பல வீனமடைகின்றது. ஆனால், முதலாளி வர்க்கம் சுபீட்சமான வாழ்க்கையை நடத்துவதற்குக் காரணம் அவர்களது கைரேகைகள் அல்ல, இன்றைய முதலாளித்துவ சமூகத்தில் அதிகாரம் செலுத்தும் வர்க்கமாகவும் சுரண்டும் வர்க்கமாகவும் இன்று இருப்பதேயாகும்; உயர்ந்த அந்தஸ்தில் இருப்பதேயாகும்.

### சீன மக்களின் முன்னேற்றத்திற்கு கைரேகைச் சாத்திரம் காரணமல்ல.

இன்று சீன மக்கள் தமது கைரேகைகளைப் பார்த்துத் தான் இவ்வளவு முன்னேற்றமடைந்துள்ளனரா? இலங்கை மக்களின் பட்டினியைப் போக்குவதற்கு அரிசி அனுப்பக்கூடிய ஆற்றல் பெற்றதற்குக் காரணம் கைரேகை, சாதகம் என்பவற்றைப் பார்த்து நெற்பயிர் செய்வதன் காரணமாகவா? இல்லை. அவர்கள் மார்க்சிஸ-லெனினிஸத்தை அடிப்படையாகக் கொண்ட மகோன்னத மாசே-துங் சிந்தனைகளுக்கேற்ப கைத்தொழில் மயத்தையும் விவசாயத்தின் நவீன மயத்தையும் அடைந்துள்ளனர்.

எமது நாட்டுத் தொழிலாளர்கள் விவசாயிகள் தமது கைரேகைகள் சிறப்பாக அமையும் நாளை எதிர்பார்த்துக் கொண்டா சோர்வடைந்துள்ளனர்? முதலாளித்துவம் தொழிலாளர்களின் உழைப்பை படுகேவலமான முறையில் சுரண்டுவதை எமது கைரேகைகள் மூலம் என்று நிறுத்த முடியும்?

கே. பு. சிரில்

நாட்டின் அரசியல் அதிகாரம் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்துக்கும், தேசிய முதலாளித்துவத்துக்குமிடையே கைமாறிக்கொண்டிருக்கிறது. தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு கைரேகைகள் ஒழுங்காக அமையும்வரை சோர்ந்துபோய் இருக்க வேண்டுமா? எமது நிலம் அற்ற விவசாயிகள் பயிர் செய்வதற்கான நிலங்கள் பெறுவதும் இந்த கைரேகைகள் நீண்டு வளர்ந்த பின்னரா? பத்து லட்சத்துக்கும் அதிகமான ஜீ. சீ. யீ. சித்தி அடைந்தவர்களும் 8000 த்துக்கும் அதிகமான வேலையில்லாத பட்டதாரிகளும் வேலை பெறுவதும் அவர்களுடைய கைரேகைகள் ஒழுங்கான முறையில் அமைந்த பிறகா? அதுவரை தமது உழைப்புச் சக்தியை இந்நாட்டுக்குப் பயன்படச் செய்யாது ஊர் சுற்ற வேண்டியது தானா? ஏகாதிபத்தியத்தையும் முதலாளித்துவத்தையும் தோற்கடிப்பதற்கும் குறிப்பிட்ட சுப முகூர்த்தம் வரும் வரையும் காத்துக்கொண்டிருக்க வேண்டுமா?

இல்லை! இத்தகைய மூட நம்பிக்கைகளை தூர எறிந்து விட்டு மாசே-துங் சிந்தனைகளை ஆயுதபாணியாகக் கொண்டு எப்படி சீன மக்கள் சுதந்திரத்தையும் விடுதலையையும் அடைந்தார்களோ அதே வழியை எமது நாட்டு மக்களும் பின்பற்றி தொழிலாளர் விவசாயிகள் தலைமையின் கீழ் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் முதலாளித்துவத்திற்கும் எதிராக நடத்தும் வர்க்கப் போராட்டம் மூலமே எமது சுதந்திரத்தையும் பொருளாதாரத்தில் சுபீட்சத்தையும் நாம் அடையமுடியும்.

12-ம் பக்கம் பார்க்க

### தரகு வேலை

''உலக விவசாயப் பிரச்சினைகளில் மிக முக்கியத்துவமானவை இரண்டே. அமெரிக்க விவசாயம் தேவைக்கதிகமாக உற்பத்தி செய்வது ஒன்று ருஷ்ய விவசாயம் மிகக் குறைவாக உற்பத்தி செய்வது மற்றொன்று. இதற்குச் சிறந்த ஒரு தீர்வும் உண்டு. அமெரிக்கா ருஷ்யா முறைகளையும் ருஷ்யா அமெரிக்க முறைகளையும் கையாண்டால் உலகில் பிரச்சினைகளே இருக்காது.''

இவ்வாறு மூளை வகுத்து யார் தெரியுமா? பெங்களூரில் நடைபெற்ற உலக விவசாய மாநாட்டில் கலந்து கொண்ட தரகு நாடான யூகோஸ்லேவியாவின் பிரதிநிதியே!

# விவசாயப் படையில் தமிழரசுத் தனம்

## காற்சட்டை கழற்றி காஞ்சோண்டி அபிஷேகம்

யூ. என். பி அரசாங்கத்தால் பெரும் ஆரவாரத்துடன் ஆரம்பிக்கப்பட்ட விவசாயப்படை முகாம்கள் 'வேலை நிறுத்தங்களாலும்', அதிகாரிகளின் 'கஞ்சல்தனமான' நடவடிக்கைகளினாலும் தமது இறுதி மூச்சை விட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையிலே விஸ்வமடு விவசாயப் படை முகாமில் நடக்கும் சில சம்பவங்கள் கிளிநொச்சிப் பகுதியில் இன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பது மட்டுமன்றி மக்கள் மனங்களிலும் கணிசமானவளவு புகைச்சலை ஏற்படுத்தி யிருக்கின்றன.

விஸ்வமடுவிலும், முத்தையன் கட்டிலும், விவசாயப் படையை நிறுவுவதில் 'தலைகீழாக' நின்ற பண்டிதர். க. பொ. ரத்தினம் இந்த முகாம்களில் நடக்கும் கொடுமைகள் பற்றி 'கண்மூடிப் பாலருந்தும் பூனையாகி' வாளாவிருப்பதுதான் அவருக்கு ஆசியூ பவுண்டேசன் காட்டிய வழி போலும்.

விவசாயப் படையைச் சேர்ந்த வாலிபர் ஒருவருக்கு அண்மையில் நடந்த 'வைபவம்' மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டதுதான் விவசாயப்படையா என்ற கேள்வியை மக்கள் மத்தியில் எழுப்பிவிட்டிருக்கிறது. அந்த வாலிபனை விவசாயப் படையைச் சேர்ந்த இரு அதிகாரிகள் தங்கள் அறைக்கு அழைத்து அவரின் காற்சட்டையைக் சழற்ற முயற்சித்தனராம். அவர் தடுக்கவே அவருக்கு அடிகொடுக்க ஆரம்பித்தனராம் அவர்கள். அவர் அடி தாங்க முடியாது வாலிபர்கள் முகாமிட்டிருக்கும் இடத்திற்கு ஓடவே கலைத்துச் சென்று மயக்கம் வரும்படி அடித்தார்களாம். வாலிபர் மயக்கமடைந்ததும் தங்கள் அறைக்கு இழுத்துச் சென்று நிர்வாணமாக்கினராம். பின் வாலிபர் மயக்கம் தெளியவே தொடர்ச்சியாக மூன்று, நான்கு மணித்தியாலங்களும் இரு அதிகாரிகளும் மாறிமாறி அடித்தனராம். இந்த இரு அதிகாரிகளும் தமிழரசுக் கட்சியின் பக்தர்கள் என்றும், பண்டிதர் க. பொ. ரத்தினத்தின் பலத்த சிபார்சின் பேரில் விவசாயப்படையில் அதிகாரிகளாக நியமனம் பெற்றவர்கள் என்றும் பேசிக்கொள்ளப்படுகிறது.

இதுபற்றி பாதிக்கப்பட்ட வாலிபர் கிளிநொச்சியின் எம். பி. யும், விஸ்வமடு விவசாயப்படையை ஆரம்பித்து வைப்பதில் முன்னுக்கு நின்றவருமான திரு. க. பொ. ரத்தினத்திடம் முறையிட்ட பொழுது 'உமக்கு விருப்பமில்லையேல் வெளியேறும்,'' என்று திமிரோடு கூறினார். ஏழை வாலிபர்கள் மீது எவ்வளவு கருணை எங்கள் எம். பி. க்கு! இச் சம்பவம் நடப்பதற்குச் சில நாட்களுக்கு முன் இன்னொரு வாலிபருக்கு மேற்குறிப்பிட்ட இரு அதிகாரிகளும் காற்சட்டையைக் கழற்றி அவருடைய மர்மஸ்தானத்தில் 'காஞ்சோண்டி' (தாங்க முடியாத சொறிவைக் கொடுக்கும் ஒரு இலை) பூசினார்களாம். இவ்வாலிபர் செய்த குற்றம்(?) கடந்த தேர்தலில் கா. பொ. ரத்தினத்திற்கு எதிராக வேலை செய்ததுதானாம்.

ஜனநாயகப் பிதா என்று அவர்தம் பக்தர்களால் போற்றப்படும் டட்லி சேனநாயக்காவின் கால் நிழலிலே சீவியம் நடத்தி தமிழினத்தையும், தமிழையும் காட்டிக் கொடுக்கும் க. பொ. ரத்தினமும் அவருடைய தமிழரசுக் சட்சியும் மாற்றுக் கட்சியினருக்கு இழைக்கும் அநியாயம்தான் இவர்கள் காத்த ஜனநாயகத்தின் பலன் போலும்! வாயில் திருக்குறளைப் பேசிக்கொண்டு அநியாயம் இழைக்கப்பட்டது பற்றி முறையிட்டபொழுது அநியாயம் செய்தது தனது 'ஆட்கள்' என்ற காரணத்தால் நடவடிக்கை எடுக்க மறுத்த பண்டிதருக்குக் கீழ் வரும் குறளைச் சமர்ப்பிக்க விரும்புகிறோம். ''வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்.''

எம். பியின் துணையுண்டென்ற துணிவில் சில்லறைச் சேட்டைகளில் ஈடுபட்டிருக்கும் இரு அதிகாரிகளுக்கும் ஒரு எச்சரிக்கை: ''உங்களுடைய தமிழரசுத் தனத்திற்கும், இளைஞர்களின் சாற்சட்டைக்குள் கைவிடும் அளவிற்கு மோசமான நிலையிலிருக்கும் உங்கள் காம வெறிக்கும் விவசாயப்படையைச் சேர்ந்த வாலிபர்களிடமே நீங்கள் பாடம் படிக்க வேண்டிவரும். உங்களுக்கு இருப்பதோ நான்கு கைகள். ஆனால் வாலிபர்களிடம் இருப்பதோ நூற்றுக்கணக்கான கைகள்.''

இது சம்பந்தமாகப் பொலிஸில் முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. பொலிஸ் இதில் யாருடைய பக்கம் நிற்கும் என்பது சொல்லியா தெரியவேண்டும்!

# சலித்துக் கொண்டாராம் குறைபட்டுக் கொண்டாராம்

யூ. என். பி தமிழரசு-தமிழ் காங்கிரஸ் ஆட்சி வந்ததிலிருந்து சைவத்தையும், இஸ்லாத்தையும், கிறிஸ்துவ, பௌத்த சமயத்தையும் பிரச்சாரம் செய்ய இந்தியாவிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும் அடிக்கடி இலங்கைக்கு வந்து கொண்டிருக்கும் பேர்வழிகளின் பட்டியலைப் பார்த்தால் பிரமிக்க வேண்டியிருக்கிறது, இந்தப் ''பெரியார்கள்'' அடிக்கடி இங்கு வருவதைப்பார்த்தால் கள்ளக்கடத்தல் காரர்கள் கூட இவ்வளவு தடவை வருவதில்லை. முதலாளித்துவ ஆட்சியில் கள்ளக் கடத்தல் காரர்களுக்கும் ''சமயப் பெரியார்களுக்கும்'' ஒட்டுறவு உள்ளது என்பது அனுபவ உண்மையாகும். கையில் பிடிப்பது ஜெபமாலை —கட்கத்தில் வைப்பது கன்னக்கோலை!

இலங்கையிலுள்ள பிற்போக்குவாதிகளால் இவர்கள் வரவழைக்கப்படுவதும், இவர்கள் இங்கு விஜயம் செய்து பிரச்சாரம் செய்வதும் எதற்காக? எல்லாம் சுரண்டும் இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பைத் தொடர்ந்தும் கட்டிக் காப்பதற்காகத்தான். உளுத்துப்போன — பழைய — பிரபுத்துவ, முதலாளித்துவக் கருத்துக்களை, தத்துவங்களை அப்படியே சமயப் போர்வையில் - தமிழ் வளர்க்குப் போர்வையில் — அழுத்தம் திருத்தமாகப் பிரச்சாரம் செய்து பரலோக சிந்தனையின்பால் மக்களின் கவனத்தை திருப்புவதற்காகத்தான். அப்போது தானே இகலோகத்தில் தமது சுரண்டலைச் செம்மையாகத் தொடர்ந்து நடத்தலாம்!

இந்நாட்டு முதலாளித்துவ-பிற்போக்கு பத்திரிகைகள் இவர்களின் வருகையைப் பற்றியும், இங்கு இவர்கள் நடத்தும் பிரச்சாரத்தைப் பற்றியும் முக்கியத்துவமும், விளம்பரமும்கொடுத்துப் பிரசுரித்து வருவதிலிருந்தே இது மேலும் நிருபணமாகிறதல்லவா?

சுரண்டும் வர்க்கத்தைச் சேர்ந்த — அதன் தத்துவங்களுக்கு வெளிச்சம் போட்டு விளம்பரம் செய்யும், வக்காலத்து வாங்கும்—இந்தப் பிரச்சாரகர்களின் வரிசையில்—பட்டியலில்—உள்ளவர்தான் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பிய ''சைவ, தமிழ் பெரியாராகிய'' திரு. அ. ச. ஞானசம்பந்தனாவார்.

இவர் இந்து மாமன்றத்தின் சார்பில் சைவமும் தமிழும் ''வளர்க்க'' வந்தாரா அல்லது அவரது நண்பரின் திருமணத்தில் பங்குபற்ற வந்தாரா என்ற பிரச்சினை இப்போது இந்து மாமன்ற மத்தியில் எழும்பியுள்ளது.

திரு. ஞானசம்பந்தன் இலங்கையில் சமயத்தையும், தமிழையும் ''வளர்க்க'' வருவது இது முதல்தடவையல்ல. அவர் ஒரு கூட்டத்தில் உரையாற்றியபோது இது இலங்கைக்கு தனது 29-வது வெற்றி விஜயம் என்று கூறி அவரே பெருமையாக ஒப்புக்கொண்டார்.

திரு. சம்பந்தன் மட்டுமல்ல, இவரைப் போன்ற ''அறிஞர்கள்'' தமிழ் மக்களுக்கு தமிழ் அறிவையும், ''சைவத்''தின் பெருமையையும் சொல்லிக் காட்டவருவது பொது மக்கள் மத்தியில் வெறுப்பை வளர்த்து வருகிறது. இவர்களின் திக்விஜயத்தின் உள்நோக்கங்களையும் மக்கள் நாளுக்கு நாள் உணர்ந்து வருகின்றனர்.

உதாரணமாக, சில காலத்திற்கு முன் கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகன்னாதன் பத்திரிகைக்குப் பிரச்சாரம் செய்ய இலங்கைக்கு வந்தபோது யாழ்ப்பாண மக்கள் கூழ் முட்டையால் எறிந்து வரவேற்றனர்.

தனது 29வது விஜயத்தைப் பற்றிப் பெருமை கொண்ட திரு. சம்பந்தனுக்கு, நெடுங்காலமாக இருந்துவந்த ஒரு பெரும் மனப்பாரத்தையும் கூறியுள்ளார். அவர் கூறியது என்னவெனில், இந்தியாவில் காந்தியின் சீடர்களாகிய,நேருவும், சாஸ்திரியும், இந்திரா காந்தியும் செய்ய நினைக்காத-செய்ய முடியாத குதிரைப்பந்தயத்தை காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா நிறுத்திவிட்டாராம். ஆனால் இப்போதுள்ள ஏழு கட்சி அரசாங்கம் இதனை மறுபடியும் சட்டரீதியாக்குமென்று தான் நம்பியிருந்தாராம். ஆனால் இவ்வரசாங்கம் இதனைச் செய்யாததையிட்டு தான் பெரிதும் ஏமாற்றம் அடைந்துள்ளதாகத் தன் நண்பரிடம் கூறிச் சலித்துக் கொண்டாராப்; குறைபட்டுக் கொண்டாராம்!

இப்போது புரிகிறதல்லவா இவர்கள் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் போர்வையில் எதற்கு வருகிறார்கள் என்று! முதலாளித்துவச் சூதான குதிரைப் பந்தயத்தை முதலாளித்துவ அரசாங்கம் சட்ட ரீதியாக்காதது சம்பந்தனுக்குப் பெரிய ஏமாற்றம்!

● 9-ம் பக்கத் தொடர்

எமது நாட்டின் அரசியல் அதிகாரம் ஏகாதிபத்தியத்திற்கு வால் பிடிக்கும் பிற்போக்குத் தலைவர்களின் கையில் இருக்கும் வரை எந்தக் கட்சி அரசியல் அதிகாரத்திற்கு வந்தாலும், அதனால் நன்மை அடைவது முதலாளித்துவமே; பாதிக்கப்படுவது சுரண்டப்படும் வர்க்கங்களே. சுரண்டப்படும் வர்க்கங்களான தொழிலாளரும் விவசாயிகளும் கைரேகைகளை நம்பியிருந்தால் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான். இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து இந் நிலைமை நீடித்தால் எமது குழந்தைகள் பிச்சை எடுக்கவே நேரிடும். ஆனால், முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்த குழந்தைகளின் நிலை மேலும் மேலும் உயரும்.

எமது மூளைகளில் உள்ள மூட நம்பிக்கைகளை அகற்றி விட்டு, நாம் தொழிலாளர் விவசாயிகளின் தலைமையின் கீழ் எமது விடுதலைக்காகப் போராடி வெற்றி பெறும் நாள் அதிக தூரத்தில் இல்லை நாம் ஸ்தாபன ரீதியாக ஐக்கியமுறுவோம்! ஏகாதிபத்தியவாதிகளையும் அவர்களின் ஏவல் நாய்களையும் தோற்கடிப்போம்! துணிவு கொள்வோம்! போரிடத் துணிவோம்! கஷ்டங்களைத் துச்சம் செய்வோம்! அலைக்கு மேல் அலையாக முன்னேறுவோம்! அப்போது முழு இலங்கையும் மக்களுக்குச் சொந்தமாகும். எல்லாவித பிசாசுகளும் அழிக்கப்படும்.

# பாய்கின்ற வேங்கையாகி பறந்துவர நாங்களுண்டு

**தூசைப்பிள்ளை மிக்கேல்**

ஏழைக்குத் தொழில் இல்லை வாழ்வும் இல்லை
இல்லறம் இயங்கவொரு வழியும் இல்லை
கூழுக்கும் காணாது கூலி வேலை
கொஞ்சமும் நிலமில்லை இரவல் வீடு

பசியுடனே படுக்கின்றோம் பஞ்சமதே எங்கள் வாழ்க்கை
ருசியுடனே உண்பதனைக் கனவிலும் காணவில்லை
கசிகின்ற ஈர நிலம் கால் மடக்கிச் சரிகின்றோம்
விஷம் கொண்ட பாம்புகளும் இது வரையும் தீண்டவில்லை.

பாடுபட்டுக் காடுவெட்டிப் பயிர் செய்ய வேண்டி வந்தோம்
பஞ்சநிலை மாறவில்லை பயிர் செய்யத் ண்ணீரில்லை
ஏழெட்டுப்பிள்ளை குட்டி ஏறுமாறுய்ப் பெற்று விட்டோம்
நாளொன்றைக் கழிப்பதற்கு தவித்து வாடுகிறோம்

ஆயுதத்தைத் தூக்கி நின்று அடிமைத்தனம் ஒழிக்கவென்றால்
பாயுகின்ற வேங்கையாகி ''றந்து வர நாங்களுண்டு
காயுகின்ற வாழ்வு தனில் தினம் கலங்கிச் சாவதிலும்
சாயுகின்ற எதிரி தன்னை சாகவைத்து நாம் வாழ்வோம்.

# மலைநாட்டில் செங்கொடிச் சங்க இயக்கம்

# மேலும் பரவுகிறது

## தோட்டங்களில் பல கூட்டங்கள்

## மாஓ சிந்தனையின் வழி செல்ல அறைகூவல்

அண்மையில் மலைநாட்டின் பல பகுதிகளிலும் இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் (செங் கொடிச் சங்கம்) கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. நுனுஓயா மாவட்டத்தின் மேல் பிரிவிலுள்ள கலாரெண்டொன் தோட்டம் அவோகா தோட்டம், தலாவாக் கெல்லை மாவட்டத்திலுள்ள தங்காகெல்ல தோட்டம், நாகசேனை ஹென்போல் குரூப்பைச் சேர்ந்த அக்ரா டிவிஷன் ஆகிய இடங்களிலெல்லாம் செங் கொடி இயக்கக் கூட்டங்கள் நடந்தன. மலைநாட்டில் செங் கொடிச் சங்கத்தின் இயக்கம் வேகமாகப் பரவி வருவதை இக் கூட்டங்கள் எடுத்துக் காட்டின. அத்துடன் அரசியல் விழிப்புணர்வும் அவர்கள் மத்தியில் ஏற்பட்டு வருவதைச் சுட்டிக் காட்டின.

இந்தக் கூட்டங்களில் எல்லாம் செங் கொடிச் சங்கத்தின் உப-தலைவர் தோழர் ரொசாரியோ பெர்ணுண்டோ கொடியேற்றி வைத்துச்சொற்பொழிவாற்றினுர். அவர் தனது பேச்சில் இன்றைய யு. என். பி. ஏழுகூட்டு ஆட்சியின் தொழிலாளி வர்க்க விரோதக் கொள்கைகளை விளக்கினுர். முதலாளித்துவ வர்க்க நலன்களைக் கட்டிக்காத்தும் வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு கால்வருடியும் வாழ்கின்ற இன்றைய யு. என். பி. ஆட்சி தொழிலாளி—விவசாயி மக்களின் நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டு வருவதோடு மட்டுமல்ல, சுரண்டும் வர்க்கத்தினரைத் தவிர, ஏனைய சகல பக்களின் நலன்களுக்கும் எதிராகச் செயலாற்றி வருவதை எடுத்துக் காட்டினுர். அரிசி வெட்டு, ரூபாமதிப்பைக் குறைத்தது, விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், பொருட்கள் தட்டுப்பாடு போன்ற பல துன்பங்களால் இந்த ஆட்சி மக்களை வாட்டி வதைத்து வருகிறது என்றுர். தொண்டமான் இத்தகைய ஒரு ஆட்சிக்குத்தான் ஆதரவு காட்டித் துணையாக நின்று வருகிறுர் என்றுர் தோழர் ரொசாரியோ.

மேலும் அவர் தனது பேச்சில் தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களுக்குச் செய்த, செய்துவருகின்ற துரோகங்களை ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தினுர். தொண்டமான் போன்ற பெரிய தோட்ட முதலாளிகள் எப்படி தொழிலாளர்களின் நலன்களைப்பற்றிச் சிந்திக்க முடியும், அவர்களின் உரிமைகளுக்காகப் போராட முடியும் என்று கேட்டார்.

தொண்டமானின் தலைமையில் தொழிலாளர்கள் கால் நூற்றுண்டுக்குப் மேலாக இருந்தும் அவர்களுடைய வாழ்க்கையில் துளியளவு கூட முன்னேற்றம் காணுதது இதற்கு ஒரு உதாராணம என்பதைக் கூறினுர் தோழர் ரொசாரியோ.

இந்த நாட்டின் மொத்த வருவாயில் பெரும் பகுதியை ஈட்டித் தருகின்ற தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டிலுள்ள சகல உழைப்பாளரையும் விடக் கடுமையாகச் சுரண்டப்படுவதைச் சுட்டிக் காட்டிய ரொசாரியோ, தொண்டமான் உட்பட திரிபுவாத-சமசமாஜச்சங்கங்களாலும் அவற்றின் தலைவர்களாலும்கூட இவர்கள் காட்டிக் கொடுக்கப்படுவதை அம்பலப்படுத்தினுர்.

### சம்பள வெட்டு!

சோவியத் யூனியனின் ரெஸ்ரோவ் பிரதேசத்திலுள்ள கரிச் சுரங்கத்தில் ஒரு தொழிலாளியின் தினச்சம்பளம் 13 ரூபிள்கள். ஆனுல் நிர்வாகம் 3 ரூபிள்களைத்தான் தொழிலாளர்களுக்கு கொடுக்கின்றது. மிகுதி ''தொழிற் சாலையின் லாபத்திற்கு'' என்ற போர்வையில் நிர்வாகத்தின் பொக்கட்டுக்குள் செல்கின்றது.

திரிபுவாத சுரண்டல் முறையில் இதுவும் ஒன்று.

தோட்டத் தொழிலாளர் தமது இன்றைய இழி நிலையிலிருந்து விடுதலை பெற, சுரண்டலுக்கும் எத்தர்களின் சூழ்ச்சிகளுக்கும் பலியாகாமல் இருக்க அவர்கள் அரசியல் ரீதியாக வளர வேண்டும் என்பதை வலியுறுத்தினுர். இன்று உலகத் தொழிலாளி வர்க்கத்திற்கும், புரட்சிகர மக்களுக்கும் வழி காட்டி நிற்கின்ற தோழர் மா சே-துங் சிந்தனையை தோட்டத் தொழிலாளரும் உயர்த்திப் பிடித்து, செங் கொடியின் கீழ் அணி திரண்டு புரட்சிகரப்பாதையில் போராடுவதுதான் தொழிலாளி வர்க்கத்திற்கு முன்னுல் உள்ள ஒரே பாதை என்றும் விளக்கினுர்.

இக் கூட்டங்களில் தோழர் ரொசாரியோ பெர்ணுண்டோவுடன் மாவட்டப் பிரதிநிதிகள் தோழர்கள் நடராசன், முருகையா மற்றும் முன்னணி தோழர்களும் பேசினுர்கள்.

---

● —6-ம் பக்கத் தொடர்

காரத்தைக் கைப்பற்றும் சந்தர்ப்பம் இருப்பதைக் கண்டதும், தலைமையில் இருந்த மார்க்சிஸ்ட்—லெனினிஸ கூட்டத்தினரைக் கேலி செய்து வெளியேற்ற முனைந்தனர். இதற்காகத்தான் ''தனி நபர் வாதம்'' என்ற கட்டுக் கதையை அவிழ்த்து விட்டு எமது கட்சியின் பொல்ஷ்விக் கூட்டத்தினரை முதலில் அவமானப்படுத்திப் பின்பு வெளியேற்றியதோடு லெனின்—ஸ்டாலின் பாட்டாளி வர்க்கக் கொள்கைக்குப் பதிலாக புதிய துரோகத்தனமான, சீர்கேடான கொள்கையை-திரிபுவாதக் கொள்கையை—முன்வைத்தனர்.

அரசியல் அதிகாரத்தை அபகரிக்கவும், சமாதான பரிணுமத்தை ஆரம்பிக்கவும் திரிபுவாதிகள் நடத்திய சதி வேலைகள், சித்தாந்த கலாச்சாரத் துறைகளில் தோன்றியவை என்றும், பொதுஜன அபிப்பிராயத்தைத் திசை திருப்பவும் முயன்றனர் என்றும் கட்டுரை மேலும் விளக்குகிறது.

அவர்கள் மூன்று விதத்தில் ''செயற் பட்டனர்''

1. ''கடந்த காலத் தவறுகளுக்கு எதிராகப் போராடுவது'' இதன் பொருள் ''பழைய'' சித்தாந்தத்தை அதாவது, மார்க்சிஸ—லெனினிஸத்தை நிராகரிப்பது.

2 ''மார்க்சிஸ—லெனினிஸத்தை ஆக்க பூர்வமாக வளர்ப்பது'' இதன் பொருள் ''புதிய'' சிந்தனையை உருவாக்குவது.

3 கலை—இலக்கியத்திலும், அன்றுட வாழ்க்கையிலும் முதலாளித்துவ சித்தாந்தத்தை வளர்ப்பது. தொழிலாளி வர்க்கத்தையும் உழைக்கும் மக்கள் யாவரையும் அரசியலிலிருந்து திசை திருப்புவது. அவர்கள் மத்தியில் சுய நலத்தையும், பேராசையையும் வளர்ப்பது.

சுருங்கக் கூறினுல் அவர்கள் பாட்டாளி வர்க்க சிந்தனைக்குப் பதிலாக முதலாளித்துவச் சிந்தனையை முன் வைத்தனர்.

முதலாளித்துவம் மறுபடி புகுத்தப் படுவதன் சாத்தியக் கூறுகளை விபரமாக ஆராய்ந்த பின், சோஷலிஸ நாடுகளில் புதிய அமைப்பு ஏற்படுத்தப் பட்டு ஒன்று படுத்தப் பட்டதும் சமாதான பரிணுமம்தான் பிரதான அபாயம் என்ற முடிவுக்கு வந்துள்ளோம் என்றும், கட்சியினதும் அரசினதும் தலைமையை அபகரித்துள்ள துரோகிகளும் உழைக்கும் மக்களின் எதிரிகளும் சமாதானப் பரிணுமத்தை ஏற்படுத்தவும் சித்தாந்தக் கலாச்சாரத் துறையில் தமது வேலையை ஆரம்பித்துப் பொதுஜன அபிப்பிராயத்தை முதலில் உருவாக்க முனைவர் என்றும் கட்டுரை விளக்குகிறது.

-தொடரும்

---

◎ —5-ம் பக்கத் தொடர்

ஏகாதிபத்தியமும், திரிபுவாதமும் ஒன்றுக மனமொத்துக் காந்தியின் நூற்றுண்டைக் கொண்டாட உள்ளன. இழிந்த நிலைக்கு வேறென்ன சான்று வேண்டும்? இதனைப் பார்க்கும்போது தோழர் மா ஓ வாசகம் ஒன்று நினைவிற்கு வருகிறது.

''சோஷலிஸ நாட்டிலுள்ள பிற்போக்கு வாதிகள் ஏகாதிபத்திய வாதிகளுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்து மக்கள் மத்தியில் முரண்பாடுகளைப் பயன்படுத்தி, தமது சதி நோக்கங்களை'' நிறைவேற்றுகின்றனர்.

★

சென்ற வாரம் இப்பத்தியிலே பாரிஸ் எழுச்சி குறித்து எழுதிய போது, அதிலே பிரெஞ்சு திரிபுவாதிகளின் மானங்கெட்ட துரோகச் செயல்களை அம்பலப்படுத்தியிருந்தோம். ஒரு கம்யூனிஸ்ட் செய்ய வேண்டிய முதல் வேலையும் முழு வேலையும் புரட்சி சம்பந்தமானதாகவே இருக்க வேண்டும் என்ற அடிப்படை உண்மையைக் கைவிட்டு, இருந்தது போல் தொடர்ந்து இருப்பதற்கு மாறுன யாவற்றையும் எதிர்ப்பது அவர்களின் பிரதான தொழிலாகி விட்டது. இதனடிப்படியிலே, மே மாதம் முதற் கிழமையில் தொழிலாளர் வேலைநிறுத்தம் தொடங்கிய போது திரிபுவாதிகள் அதனைப் பல வழிகளிலும் தடுக்கவே முயன்று பார்த்தனர். கடைசிவரை யூனியன்களின் அனுமதியின்றியே இலட்சோப லட்சம் பாட்டாளிகள் களத்தில் குதித்தனர். வேலை நிறுத்தம் உச்சகட்டத்தில் இருக்கும் போது திரிபுவாதத் தொழிலாளர் ''தலைவர்கள்'' திரை மறைவில் முதலாளிகளுடன் ''பேச்சுவார்த்தை'' நடத்தத் தொடங்கினர். இப்பொழுது மாணவருக்கும் அதாவது புரட்சிகர கோஷங்களுக்கும் தமக்கு எதுவிதத் தொடர்பும் இல்லை என்று அவசர அவசரமாக அறிக்கை விட்டுள்ளனர். சோவியத் பத்திரிகையான பிராவ்டாவும் மாணவரைத் திட்டித்தீர்த்துள்ளது. இவைதெல்லாம் எமக்கு ஒரு பெரும் உண்மையை உணர்த்துகிறது. இன்றைய உலகில் எங்கு புரட்சிக் குரல் கேட்கிறதோ அங்கே கழுத்தறுக்க தயாராக நிற்பர் திரிபுவாதிகள். காரணம் என்ன? டிகால் அறிவித்துள்ள ''பொதுத் தேர்தல்'' தமக்குச் சாதகமாக அமையும் என மனப்பால் குடிக்கின்றனர், பிரெஞ்சுத் திரிபுவாதிகள். அதனுல் எதுவிதப் பலாத்காரச் செயல்களிலும் ஈடுபட்டு வாக்காளர் மனதைப் புண்படுத்த அவர்கள் விரும்பவில்லை!!

இந்தக் குரல் எமக்கும் பழக்கமானதுதானே! கெனமன் கும்பல் மட்டுமன்றி அயல் நாட்டிலே நவ-நவீன திரிபுவாதிகளான நம்பூதிரிபாத், ஜோதிபாசு ரணதிவே முதலியோரும் இதனைத்தானே கூறியுள்ளனர். ஆனுல், வாக்காளரிடம் உண்மையான அதிகாரம் உண்டா?

தற்சமயம் பிரான்சில் உள்நாட்டு யுத்தச் சூழ்நிலை காணப்படுகிறது என்ற சாக்கில் இராணுவம் பாரிஸ் நகரைச் சுற்றி முற்றுகை இட்டுள்ளது கம்யூனிஸ்டுகளின் கையோங்க விடமாட்டோம் என இராணுவத் தலைவர்கள் உறுதி கூறியுள்ளனர். பூர்ஷுவாக்கள் தமது வர்க்க நலனை இராணுவத்தின் மூலம் பாதுகாக்க முற்பட்டுள்ளனர். அதற்கு டிகால் சம்மதமே. அதாவது ஏறத்தாழ நூறு லட்சம் பாட்டாளிகள் அரசாங்கத்தைக் கலக்கிய போதும் ஆளும் வர்க்கம் அசைவதாயில்லை. இந்நிலையில், திரிபுவாதிகள் இடதுசாரி அரசாங்கம் அமைக்க உதவும்படி வாக்காளரைக் கோருவது அர்த்தமற்றது. பாராளுமன்ற வாதத்தின் அத்தனை சீரழிவுகளையும் பிரஞ்சுத் திரிபுவாதிகள் துலாம்பரமாக்கியுள்ளனர். ஆனுல் திரிபுவாதிகள் பலாத்காரம் வேண்டாம் என்று சாத்விகம் பேசிய போதும் தாம் ஜனநாயக நிறுவனங்களை மதிப்பவர்கள் என்று பறை தட்டியபோதும் ஆளும் வர்க்கம் என்ன செய்தது? உள்நாட்டு யுத்த பீதியைக் கிளப்பி கவசப் படைகளையும் டாங்கிகளையும் பாரிஸுக்கு வரவழைத்துள்ளது. உள்நாட்டு யுத்தம் என்பதும் வர்க்கப் போர்தானே. அதுதான் என்றே தோழ மாசே-துங் கூறினுர்;

''வர்க்க சமுதாயத்தில், புரட்சிகளும் புரட்சிகர யுத்தங்களும் தவிர்க்க முடியாதவை. அவை இல்லாவிட்டால், சமுதாய வளர்ச்சியின் எந்த ஒரு பாய்ச்சலையும் நிறைவேற்ற முடியாது; பிற்போக்கு ஆளும் வர்க்கங்களைத் தூக்கியெறிவது சாத்தியமாகாது; எனவே, மக்கள் அரசியல் அதிகாரத்தைப் பெறுவது அசாத்தியம்''

விஞ்ஞான பூர்வமான நியதி இவ்வாறிருக்கவும், பிரெஞ்சுத் திரிபுவாதிகள் அரசியல் பதவி பெறத் துடிப்பது கோமாளித்தனமாகவே உள்ளது. ஆனுல் எமது பாதையைத் தாமே வகுப்பர்; திரிபுவாதிகள் கை விரித்த போதும் மகத்தான பிரெஞ்சு மாணவர் எழுச்சி இப்பொழுது மிலான், ரோம் முதலிய இத்தாலிய நகரங்களுக்கும் பரவியுள்ளது. பத்தொன்பதாம் நூற்றுண்டிலே பிரான்ஸ் தும்மினுல் ஐரோப்பாவுக்குச் சளிச் சுரம் பிடிப்பதுண்டு என வரலாற்றுசிரியர் சொல்லுவர். பாரிஸ் கம்யூன் மரபில் வரும் பாரம்பரியச் சிறப்புடைய பிரெஞ்சு பாட்டாளிகளும். புத்தி ஜீவிகளும் அக் கூற்றை மீண்டும் நிரூபித்து வருகின்றனர்.

# மாவட்ட சபை மசோதாவை
# நாம் எதிர்க்கவுமில்லை ஆதரிக்கவுமில்லை

— 1-ம் பக்கத் தொடர்

கும், தமிழ் மக்களுக்கும் வேலை தேடுகின்ற வாழ்க்கை வசதி தேடுகின்ற — பிரச்சினைகளாகும். இன்றுள்ள வரட்சியடையும் ஏகாதிபத்திய முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் கீழ் இறுதியான முடிவு எதையும் காண முடியாது. வளர்ச்சியடைகின்ற ஒரு சோஷலிஸ பொருளாதார அமைப்பின் கீழ் தான் இப்பிரச்சினைகள் யாவும் —இந்நாட்டில் வாழும் சகல இன மக்களுக்கும் பரஸ்பரம் நன்மையளிக்கும் விதத்தில்—சரிவரத் தீர்த்து வைக்க முடியும்.

ஆகையால், எமது சக்திகளை பயனற்ற வகுப்புவாதப் பாதையில் விரயம் செய்வதல்ல, புரட்சிகர இயக்கத்தின் கடமை. எமது பிரதான பொது எதிரி வெளி நாட்டு ஏகாதிபத்தியமும், யு. என். பி. யும் தான் என்பதை தெளிவுபடுத்தி, இப் பிற்போக்கு சக்திகளுக்கெதிராக ஒரு புரட்சிகரத் திட்டத்தின் கீழ் ஐக்கியப்படுத்தக் கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்துவது தான் எமது கடமையாகும். வேறு எந்தப் பாதையும் பயனற்றது.

நமது நாட்டு பௌத்த குருமார்கள் வகுப்புவாதப் பிரச்சாரத்தில் முக்கியப் பங்கெடுப்பது. வருந்தத்துக் குரியதாகும். வியட்நாம் போன்ற நாடுகளில் உள்ள பௌத்த பிக்குகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டங்களில் முன்னணியில் நிற்கின்றனர். இந்த உதாரணத்தைத்தான் இந் நாட்டு பௌத்த குருமார்கள் பின்பற்றவேண்டும். இன்று மக்கள் இன்னல் படுவது அவர்கள் முற்பிறப்பில் செய்த பாவத்தின் பயனால்தான் என்று சதா காலமும் மக்களை ஏமாற்ற முடியாது. ஏனெனில் சீன, வியட்நாம் போன்ற நாடுகளிலே உள்ள மக்கள் தமது தலைவிதியைத் தாமே பொறுப்பேற்று, புரட்சியின் மூலம் அதனை மாற்றியுள்ளனர் என்பதை நமது நாட்டு மக்கள் அறிவர்.

சிங்கள மக்களும், தமிழ் மக்களும் இதனைத்தான் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களை ஐக்கியப்படுத்த பல காரணங்கள் உள்ளன. அவர்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகள் சொற்பமானவை. ஒரு நாள் யு. என். பி. யும் தமிழரசும், மறு நாள் கூட்டணிக் கட்சியினரும் மாறிமாறி நடத்துகின்ற வகுப்புவாத பிரச்சாரத்திற்கு நாம் பலியாகாமல் இருப்போமாக!

மாவட்ட சபைகளுக்கு ஆதரவாகவோ, எதிராகவோ நடத்தப்படும் இயக்கங்களில் எமது சக்திகளை விரயம் செய்யாதிருப்போமாக. மசோதாவை நாம் எதிர்க்கவுமில்லை, ஆதரிக்கவுமில்லை. தமிழர்களுக்கு அது எதையும் கொடுக்கவில்லை. சிங்களவர்களுக்கும் அதனால் எதுவித அபாயமுமில்லை. அது ஓர் அர்த்தமற்ற சட்டம். இரு பிரிவிலான கட்சிகள். மக்களை ஏமாற்றுவதற்கு அதனைப் பயன் படுத்துகின்றன. ஆதலால் நாம் இதனை விடுத்து, மக்களுக்குப் பயனுள்ள பிரச்சினைகளில் கவனம் செலுத்துவோமாக! வேலையில்லாத் திண்டாட்டம், உயர்ந்து செல்லும் வாழ்க்கை செலவு போன்ற பிரச்சினைகளில் பொதுமக்களைப் பிளவு படுத்தாத, ஐக்கியப் படுத்தும் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவோமாக! பாராளுமன்ற அரசியல் சந்தர்ப்பவாதத்தை நிராகரிப்போம்! முதலாளித்துவ பாரளுமன்ற ஜனநாயகத்தை நிராகரிப்போம்- வெளிநாட்டு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், யு. என் பி. ஆகியவற்றை புரட்சிகர ரீதியில் தூக்கிஎறிய ஒன்றுபடுவோம்!

---

◎ — 8-ம் பக்கத் தொடர்

சம் டாலர் பெறுமதியான இஸ்ரேலியப் பொருட்கள் சோவியத் யூனியனுக்கு அனுப்பப்பட்டன. 1965-ல் இதே காலத்தில் செய்யப்பட்ட வியாபாரத்திலும் பார்க்க இது நான்கு படங்கு கூடுதலாகும். தனது அடிவருடிகள் மூலமாக மிகப் பெரிய அளவில் இஸ்ரேலுடன் சோவியத் யூனியன் பொருளாதார ஒப்பந்தங்களைச் செய்துள்ளது.

சோவியத் யூனியனில் வாழ்ந்த யூதர்களின் பெரும்பாலோரை சோவியத் திரிபுவாத கும்பல் இஸ்ரேலில் குடியேறச் செய்துள்ளது. கடந்த 10 வருட காலத்தில் பல பால்கன் நாடுகளிலிருந்தும் சென்று இஸ்ரேலில் குடியேறியவர்களில் பெரும்பாலும் சோவியத் நாட்டிலிருந்தும், பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் வந்தவர்கள் என கணிக்கப்பட்டுள்ளது இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆயுதங்களைக் கொடுத்துள்ளது; சோவியத் யூனியன் ஆட்களைக் கொடுத்துள்ளது என பாலஸ்தீன் நண்பர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இவைமட்டுமல்ல, சோவியத் திரிபுவாதிகளின் தூண்டுதலின் பேரில் கூட்டப்படும் சர்வதேச மநாடுகளிலும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் இஸ்ரேலும் செய்கின்ற ஆக்ரமிப்புகளைக் கண்டிப்பதற்குப் பதிலாக, பாலஸ்தீன் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் தீர்மானங்களைத் தடுக்கப் பெருமுயற்சிகள் எடுத்தனர். இப்படியெல்லாம் சோவியத் திரிபுவாதிகள் செயலாற்றுவதைக் கண்டுதான் பாலஸ்தீன் விடுதலை ஸ்தாபனத்தின் தலைவரான அஹ்மத் எல் ஷுகைரி, ''சில நாடுகள் தங்களை சோஷலிஸ நாடுகளென அழைக்கின்றன, ஆனால், அவை இஸ்ரேலை அங்கீகரித்துள்ளன. அத்துடன் ஒன்றுபட்டும் செயல் படுகின்றன, உண்மையில் அவை சோஷலிஸ நாடுகளல்ல'' என்று கூறினார்.

பாலஸ்தீனத்திலிருந்த லட்சக்கணக்கான அராபியர்களை இஸ்ரேல் அரசாங்கம் பலாத்காரமாகத் துரத்தியபோது— அவர்களின் உடமைகளையும், நிலங்களையும் பறித்து அகதிகளாக விரட்டியபோது—சோவியத் யூனியன் திரிபுவாதிகள் கண்டனம் எதனையும் தெரிவிக்கவில்லை, அகதிகளாக்கப்பட்ட பாலஸ்தீன் அராபியர்களுக்கு இஸ்ரேல் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்ற ஐ. நா. வின் தீர்மானத்தைக்கூட அமுலாக்க எந்தவித நடவடிக்கையும் சோவியத் திரிபுவாதிகள் எடுக்கவில்லை.

இஸ்ரேலை ஒழித்துக் கட்ட 1964-ல் பாலஸ்தீன் விடுதலை ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. அந்த ஸ்தாபனம் மாஸ்கோவிலிருந்து இயங்க அனுமதி கோரப்பட்டபோது திரிபுவாத ஆட்சி அதனை மறுத்து விட்டது.

இஸ்ரேல் தூதுவர் கிரெம்லினில் விசேஷ விருந்தினராய் இருக்கிறார். இரு நாடுகளுக்குமிடையிலுள்ள உறவை மேலும் வளர்ப்பதுபற்றி 1966 ஏப்ரல் மாதத்தில் சோவியத் வெளிநாட்டமைச்சர் குரோமிகோ இஸ்ரேலிய வெளி நாட்டமைச்சர் அபா இபானுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இஸ்ரேல் பற்றி சோவியத் கொண்டுள்ள கருத்து மிகவும் திருப்திகரமாக உள்ளது என அபா இபான் குறிப்பிட்டார்.

இப்படியாக சென்ற ஆண்டு ஜூன் 5-ந் தேதி இஸ்ரேல் அராபிய மக்களின்மீது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுப்பதற்கு முன்பாகவே இஸ்ரேலின் பக்கம்தான் நின்றது சோவியத் திரிபுவாத அரசாங்கம். அதேசமயம் அராபிய மக்களின் நண்பன் என்றும் இரட்டை நாடகம் ஆடியது. மிகுதியை அடுத்த இதழில் பார்ப்போம்.

---

◎ — 7-ம் பக்கத் தொடர்

பொலிசாரின் தாக்குதலை எதிர்ப்பதற்கு ஐக்கியப்பட்டனர்.

மே 6-ந் தேதி பலாத்காரம் உச்ச கட்டத்தை அடைந்தது. அன்று பின்னேரம் 15,000 மாணவர்கள் லத்தீன் பகுதியில் ஒன்று சேர்ந்தனர். அப்பகுதி பொலிசாரினால் தடை போடப்பட்டு மூடப்பட்டது. முதன் முதலாக கண்ணீர்ப் புகை பாவிக்கப்பட்டது. 360 க்கு மேற்பட்ட மாணவர்களும் பல பார்வையாளர்களும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அடுத்த நாள் முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் சர்வதேசிய கீதத்தை இசைத்துக்கொண்டு மொன்பானர்சேயிலிருந்து ஆர்க் டி டிரியோம்பிற்கு ஊர்வலமாகச் சென்றனர். அவ்வாறு சென்றபோது அவர்கள் கடந்து சென்ற தேசிய அசெம்பிளியை (பாராளுமன்றம்) கவனியாது சென்றமைதான் இதில் முக்கிய விஷயம். அவர்கள் அக் கட்டிடத்தின் மேல் ஒரு சிறு கல்லைத்தானும் வீசவில்லை. பாராளுமன்றத்தில் ஒருவித முக்கியத்துவமுமில்லை என அவர்களில் சிலர் கூறிக்கொண்டனர்.

மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றபோது ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அவர்களுடன் இணைந்து ஊர்வலத்தில் சென்றனர். இதன் மூலம் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கிடையே ஒற்றுமை உண்டாக்கப்பட்டது. அந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்ட பதாகைகளில் குறிப்பிடப்பட்டிருந்த வாசகங்களிலிருந்து அவ்வூர்வலத்தின் அரசியல் தன்மையை அறிந்துகொள்ளலாம். ''கம்யூன் நீடூழி வாழ்க! (1871-ல் நடைபெற்ற பாரிஸ் கம்யூனைக் குறிப்பிடுவது) என்ற சுலோகங்கள் அப்பதாகைகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இதன் பின்னர் பிரெஞ்சுத் திரிபுவாதிகள் கண் விழித்துப் பார்த்த போதுதான் அந்நாட்டில் ஒரு புரட்சிகர இயக்கம் ஆரம்பித்திருப்பதை அறிந்தனர். இதுவரை அவர்கள் மாணவர்களைக் கேலி செய்து வந்தனர். ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றி, அப்போராட்டத்தைப் ''பாதுகாப்பான'' வழியில் செலுத்துவதற்கு அவர்கள் முடிவெடுத்தனர். பிற்போக்கைப் பாதுகாப்பதற்கு அவர்கள் தம்மைத் தயார் செய்து கொண்டனர், திரிபுவாத எழுத்தாளரான லூயி அரக்கன் என்பர், பொவே வாட் செயின்ட் மைக்கேல் கட்டிடத்தைக் கைப்பற்றியிருந்த மாணவர்கள் மத்தியில், தனது கட்சி எவ்வாறு மாணவர்களுடன்—அவர்கள் பக்கத்தில்— இருந்துள்ளதென்பதை விளக்க முனைந்தபோது மாணவர்கள் கூச்சலிட்டனர்.

—தொடரும்

---

## வாக்குக் கேட்டவரால் தாக்குப் பிடிக்க . . .

◎ — 4-ம் பக்கத் தொடர்

லேயே வேலையின்றி இருக்கும் போது, இவர்கள் ஏன் வந்துள்ளார்கள் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. பொறியியலாளர் சங்கம் அமெரிக்க 'நிபுணர்கள்' இலங்கைக்கு வேண்டாம் என்று தீர்மானமே நிறைவேற்றியிருக்கிறது.

ஆசிய பவுண்டேசனின் கிளை நிறுவனமாக இலங்கையில் இயங்கிவரும் கல்வி நிறுவனத்தின் தலைவராக சமீப காலம் வரை இருந்தவர் திரு. பேரின்பநாயகம் ஆவார். இவர் இலங்கை அரசாங்க கல்விப் பகுதியின் முன்னாள் தேர்வுக் கமிஷனராகப் பதவி வகித்தவர். கமிஷனர் பதவியிலிருந்து இளைப்பாறியவுடன் ஆசிய பவுண்டேசன் கல்விப்பகுதிக்கு பொறுப்பேற்றுக் கொண்டார். இப்படிப் பார்க்கும் போது இவர் மீதிருந்த அமெரிக்கச் செல்வாக்கு, இவர் தேர்வுக் கமிஷனராகப் பதவி வகித்த காலத்தில் எமது அரசாங்கத்தின் கல்விக் கொள்கையில் எவ்வளவு பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்குமென்று சொல்லத் தேவையில்லை.

இவர், பேராதனை பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்த 'மாணவர்களை'ச் சந்திக்க அடிக்கடி பேராதனை வந்து சென்றவர் என்றும், பல்கலைக்கழக மாணவர்கள் பேசிக்கொள்கின்றனர்.

பேராதனையில் பல நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு மாணவர் படிக்கின்றனர். இருந்த போதிலும் 'மாணவர்களுக்கு' ஏனைய வெளிநாட்டு மாணவர்களை விட பல்கலைக்கழகத்தில் அளிக்கப்பட்டுள்ள வசதிகள் அதிகம். இவர்களுக்குப் பல்கலைக்கழக நூல் நிலையத்தில் விரிவுரையாளர்கள் மட்டுமே உபயோகிக்கின்ற தனி அறைகள் வழங்கப்பட்டன. ரைப்ரைட்டர் வசதிகளும் வழங்கப்பட்டன. இவையெல்லாம் பல்கலைக்கழக மாணவர் மத்தியிலே பெரும் எதிர்ப்பை உருவாக்கி விட்டன. அனுமதியின்றி விரிவுரை வகுப்பில் நுழைந்த அமெரிக்க மாணவனொருவனை, பொருளாதாரப் பேராசியர் ஒருவர் வகுப்பை விட்டுத் துரத்தியதும் நினைவில் உள்ள நிகழ்ச்சி.

லெவின் என்ற பெயருடைய ஓர் அமெரிக்க மாணவன் ஜேம்ஸ் பீரிஸ் மண்டபத்தில் தமிழ் மாணவர் ஒருவரோடு ஓர் அறையில் தங்கியிருந்தார். அப்போது 1965-ம் ஆண்டு தேர்தல் மும்முரம். இந்த அமெரிக்கன் தனது நண்பர் உட்பட பல மாணவருக்கு யு. என். பி. தேர்தலில் வெற்றி பெற்றுத் தருவதாக உறுதியளித்திருந்தார். சீனு இலங்கையின் தேர்தலில் தலையிடுகிறது என்ற பொய்க் கதையை முதலாளித்துவப் பத்திரிகைகள் பரப்பிக் கொண்டிருந்த சமயத்தில் இச் சம்பவம் நடந்து கொண்டிருந்தது. மேற்படி லெவின் அளித்த வாக்குறுதியை சம்பந்தப்பட்ட மாணவரே எனக்கு கூறினார். அமெரிக்கரின் அறை நண்பரான இத் தமிழ் மாணவர் ஒரு ட்ரொட்ஸ்கியவாதி. ட்ரொட்ஸ்கியவாதியாகப் போட்டியிட்டுப் பல்கலைக்கழக மாணவர் சங்கப் பத்திரிகையின் ஆசிரியர் பதவியைப் பெற்றவர். இந்த ட்ரொட்ஸ்கியவாதிகள் தாங்கள் தாம் உண்மையான மார்க்சிஸ்டுகள் என்று பல்கலைக்கழகத்தில் பிதற்றித்திரிந்தவர்கள். லெவினுடு இவர்கள் கொண்ட உறவுக்கு கைமாறாக பல்கலைக் கழக மாணவர் சங்கப் பத்திரிகையில் கம்யூனிஸ்டுகளைத் தாக்கி அமெரிக்க லெவின் எழுதிய கட்டுரை பிரசுரமாயிற்று. இன்னொரு அமெரிக்கன் எழுதிய கட்டுரையும் அதில் பிரசுரமாகியது. மிகத் தந்திரமாக அமெரிக்கர்கள் ட்ரொட்ஸ்கியவாதிகளின் உதவி கொண்டு பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் ஊடுருவி விட்டார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு ட்ரொட்ஸ்கியவாதிகள் துணைபோதல் புதிய விஷயமல்ல. திரிபுவாதமும் ட்ரொட்கிஸ வாதமும் ஏகாதிபத்தியத்தின் கருவிகள் என ஸ்டாலின் கூறியிருக்கிறார். இலங்கையின் 'ட்ரொட்ஸ்கிஸத் தந்தை, பிலிப் அமெரிக்காவிலே ட்ரொட்ஸ்கிஸத்தை படித்தவரென்பதும், தற்போது புரட்சிகர ட்ரொட்ஸ்கிஸவாதி தம்பர் அமெரிக்காவுக்கு ஆசிய பவுண்டேசனின் பணத்தில் இலவசப் பயணம் போய் வந்ததும் தோழர் ஸ்டாலினின் கூற்றை நிரூபிக்கின்றன.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனின் பிளேஸ், -2, கொழும்பு அச்சிட்டது: ''தொழிலாளி'', அச்சகம் 121, யூனியன் பிளேஸ், கொழும்பு -2